முழு நாவல்



# அப்பா வந்துட்டார்...

வாழ்க்கையைச் சில ஆண்டுகளாகத் திட்டமிட்டு நான் நடத்தி வருகிறேன். ஐந்து நிமிடங்கள் என் நிகழ்ச்சி நிரல் மாறினாலும், சீட்டுக்கட்டுக் கோபுரம் சரிவதுபோல் அன்றைய பணிகள் எல்லாம் சரிந்து விடும்.

வழக்கம் போல் ஐந்து மணிக்கெல்லாம் எழுந்துவிட்டேன். பல் தேய்த்துக் குளித்து வருவதற்குள், டிகாக்ஷன் தயாராகிவிடும். சிறிய கோப்பையில் காபி தயாரித்து விட்டு, என் மகள் விமலாவைத் தட்டி எழுப்புவேன்.

"ஒவ்வொரு நாளும் நான் இப்படி உன்னை வற்புறுத்தி எழுப்பமாட்டேன். கல்லூரி பஸ் தெருமுனையில் நமக்காக இரண்டு நிமிடங்கள்வேண்டுமானால் காத்திருக்கும்" என்று கூறிவிட்டு, நான் சாதாரண புடைவையை உடுத்தி, எதிரே உள்ள பிள்ளையாரப்பனைக் கண்டு வணங்கி வேண்டிக் கொள்வது ஒன்றுதான், என் இறை வழிபாடு. அப்போது என் உதடுகள் கந்தர் சஷ்டிக் கவசம் முணுமுணுக்கும். பிறகு விநாயகர் அகவலைச் சொல்லி முடித்து, என் பிளாட்டிற்கு வந்து கதவைத் தட்டுவதற்கும் விமலா குளித்துத் தயாராக இருப்பதற்கும் சரியாக இருக்கும்.



அன்று, மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டிய பாடத்தைப் பற்றிய குறிப்பை ஒருமுறை பார்த்துக் கொள்வேன். குக்கரின் ஊதல் இரண்டு மூன்று முறை ஒலிக்கும்.

## விக்கிரமன்



Compiled by lavan_joy



Compiled by lavan_joy

நிமிடக் கணக்கு என்றேனே... இவையெல்லாம் அந்தந்த நேரத்தில் நடைபெற்றால்தான், நான் கல்லூரிக்கு எட்டரை மணிக்குப் புறப்படச் சரியாக இருக்கும். ஒருநாள்கூட நேரம் தவறமாட்டேன்.

எனக்கென்று என்ன சாப்பாடு? என் மகளுக்கு அவள் படிக்கும் கல்லூரியிலேயே கட்டாயமாகக் காலைச் சிற்றுண்டி, இடைவேளைத் தேநீர், பகல் உணவு எல்லாம் அளித்துவிடுகிறார்கள். என் ஒருத்தியின் காலைப் பசி தணிய ஏதாவது தயாரித்து, பகல் உணவையும் சிறு டப்பாவில் திணித்துக் கொண்டு, கடிகாரத்தைப் பார்ப்பேன்.

இன்னும் இருபது நிமிடங்கள் இருக்கின்றன. தொலைக்காட்சியில் ஜோதிடப் பலன்களை உலகம் உய்வதற்காக ஜோதிடர் வித்தியாசமாகச் சொல்லிக் கொண்டிருப்பார். கஷ்ட நிவாரணத்துக்குப் பரிகாரம் சொல்வார். எனக்கு அவ்வளவு ஈடுபாடில்லை. செய்திகள் வாசிப்பவர் திரும்பத் திரும்ப ஒரே செய்தியைச் சொல்லிக் கொண்டிருப்பார்.

ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு விதப் புடைவை. முதல் நாளே எடுத்து நாற்காலியின் மீது வைத்திருப்பேன். நகைகளில் எனக்கு ஈடுபாடில்லை. நன்றாக உடுத்த வேண்டும். மாணவிகளுக்குப் பாடத்தைக் கற்றுத் தர வேண்டும். நானும் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

'தினம் ஒரு பட்டுப் புடைவை உடுத்தலாம்; பணத்தைச் சேர்த்து வைத்து என்ன செய்யப் போகிறாய்?' என்று என்னுடன் பஸ்ஸில் பயணமாகும் மேரி டீச்சர் கேட்பார்.

"பட்டுப் புடைவை உடுத்தினால்தான் கௌரவமாக இருக்குமா? நம் மனத்திற்குத் திருப்தியாக இருக்க வேண்டும்; பார்ப்பவர்களுக்கு இலட்சணமாகத் திகழ வேண்டும்" என்று மெல்ல சிரித்துக் கொண்டு சொல்வேன். என் கரம், கழுத்திலுள்ள மெல்லிய சங்கிலியைச் சரிப்படுத்தும்.

"சங்கிலியிலேயே மாங்கல்யத்தைக் கோத்துக் கொள்வது உங்கள் வழக்கமா?" – மேன்மேலும் பேச்சுக் கொடுப்பாள் மேரி. சுற்றும் முற்றும் ஒருமுறை பார்ப்பேன். பேருந்தில் என்னுடன் கல்லூரிக்கு பயணம் செய்யும் சக ஊழியர்கள் பார்வை ஒரு தடவையாவது என்னை மொய்க்காமலிருக்காது.

பள்ளியில், கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போது குதூகலமாக, மகிழ்ச்சியாகச் சென்றதுபோல் வாழ்க்கைப் படகு இப்படியே சென்று கொண்டேயிருக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். காற்று ஒரே மாதிரி வீசுவதில்லை. காற்று வீசுவதற்கேற்பப் பாய் மரத்தைச் சரி செய்திருக்க வேண்டும். தவறி விட்டேன். எனக்கு வழிகாட்ட, யோசனை


Compiled by lavan_joy

கூற ஆளில்லை.

படிப்பினையால் அனுபவமா? அனுபவத்தால் படிப்பினையா? சிந்தித்துப் பார்க்கக்கூட இப்போது நேரமில்லை. இரண்டும் சேர்ந்து என் வாழ்க்கையை ஒரு நிலைக்குக் கொண்டு வந்துவிட்டன.

**கா**தல் எவ்விதம் உதயமாகிறது? கதைகள் படிப்பது, தொலைகாட்சி திரைப்படங்கள் பார்ப்பதன் மூலமாகவா, பருவத்தின் காரணமாகவா? எனக்குப் புரியவில்லை. கல்லூரி வாழ்க்கை எனக்குத் தொடக்கத்தில் கொண்டாட்டமாகத்தான் இருந்தது.

அப்பா இறந்த பிறகு அம்மாவின் பேச்சை நான் சரிவரக் கேட்கவில்லை. 'ஓரளவுக்குப் படிப்பு போதும். வேலைக்குச் சென்று சில ஆண்டுகள் கழித்துக் கல்யாணம் செய்து கொண்டு நிலையாக வாழ்க்கையை நடத்தலாம்' என்று அம்மா சொல்வார்கள். அந்தப் பொன்மொழிகளை மனசு ஏற்க மறுத்தது. அப்பா சேமித்து வைத்துச் சென்ற தொகையால் குடும்ப வண்டி ஓடியது.

எனக்குப் படிப்பு நன்றாக வந்தது. மற்றவர் பொறாமைப்படும் அளவுக்கு மதிப்பெண்கள் கிடைத்தன. மாநில அளவில் முதல் வரிசை கிடைத்தது. பாராட்டுதலும், மற்றவரின் தூண்டுதலும் என்னை ஆராய்ச்சிப் படிப்பில் ஈடுபடுத்தின. அதற்குத் தூண்டுகோலாக செல்வன் வந்து சேர்ந்தான். முதல் சந்திப்பிலேயே செல்வனை எனக்குப் பிடித்துவிட்டது. அதற்குப் பெயர் 'காதல்' என்று அப்போது எனக்குத் தெரியவில்லை.

'மனத் தத்துவமும் மனித நேயமும்' என்ற தலைப்பில் முனைவர் பட்டத்திற்குக் கடுமையாக ஆராய்ச்சிப் படிப்பில் ஈடுபட்ட என்னால் சொந்த மனநிலையையும், என்னைச் சுற்றியுள்வர்களைப் பற்றியும் உணர முடியவில்லை. படிப்பு, ஆராய்ச்சி, செல்வனைச் சந்திப்பது... இவையே என் கடமையாகக் கருதினேன்.

ஆனால், முனைவர் பட்டத்தில் என்னுடன் படிக்க விண்ணப்பித்த செல்வன் திடீரெனத் தொடரவில்லை. அவர்கள் வீட்டுப் பொருளாதாரப் பிரச்னை, தந்தையின் வற்புறுத்தல் அவனை ஆராய்ச்சிப் படிப்பில் தொடர விடவில்லை. அவனுடன் மட்டும் பழகி வந்த, எனக்கு செல்வனின் முடிவு அதிர்ச்சியை அளித்தது. அவனைப் பார்க்காமல் என்னால் ஒருநாளும் இருக்க முடியாது என்ற பாசப் பிணைப்பில் கட்டுண்டேன்.

"உன் படிப்பிற்கும் சேர்த்துப் பணஉதவி செய்ய என்னால் முடியும். எங்கள் குடும்பத்தில் நான்தான் சர்வாதிகாரி. வங்கியில் பணத்தை


Compiled by lavan_joy

வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறேன்?" என்றேன்.

"இல்லை, மேடம்" என்று செல்வன் பேச்சைத் தொடங்கினான்.

"என்ன மேடம், கீடம் என்று அழைக்கிறாய்? உன்னைப் பெயர் சொல்லி நான் உரிமையுடன் ஒருமையில் அழைக்கிறேன். நீ மேடம் என்ற உயர்ந்த உறவு சொல்லி அழைப்பதால் நெருக்கத்தைக் குறைக்கப் பார்க்கிறாய். அதை நான் விரும்பவில்லை" என்று செல்லமாகக் கோபித்தேன்.

"நான் செல்வன். நீங்கள் செல்வி!" – அவன் சொல்லிச் சிரித்தான்.

"நீங்கள் செல்வியா? நீ செல்வி என்று சொன்னால்தான் நம் உறவு பலப்படும்" என்று கூறினேன்.

"உறவா?" – செல்வன் சிரித்தான். அவன் மனநிலை எனக்குச் சில நாள்களாகப் புரிந்துதானிருந்தது.

"ஆமாம்; உறவுதான். என் மனத்தில் பல திட்டங்கள். எதிர்காலத்தைச் சரிவரத் தொடக்கத்திலேயே முடிவு செய்யாவிடில் வாழ்க்கையே பாழ். இப்போது என் ஆராய்ச்சி அந்தக் கோணத்திலிருப்பதால், என்னையே முதலில் ஆராய்ச்சியில் ஈடுபடுத்திக் கொள்ள முடிவு செய்து விட்டேன்" என்று கூறி விழிகளில் குறும்புத்தனத்துடன் கூடிய சிரிப்பை வரவழைத்தேன்.

செல்வன் பொல்லாதவன். நான் எதைப் பற்றிச் சொல்ல வருகிறேன் என்று அவனுக்கு தெரியும்.

"செல்வன்! உன் மனத்தைத் தெளிவாக வைத்துக் கொள். குழப்பத்தைச் சேர்க்காதே. படிப்பை நிறுத்திவிட்டு– நல்ல வரனாக – உன் அப்பா பார்த்து வைத்திருக்கும் பெண்ணை மணக்கப் போகிறாய். என் மீதும் உனக்கு 'அது' ஏற்பட்டிருப்பதை மறைக்காதே. சொல்ல முடியாமல் தவிக்கிறாய்; முடிவுக்கு வர முடியாமல் குழம்புகிறாய். அப்படித்தானே. உறவு ஏற்படுத்திக் கொள்ள ஆசைதான். என்னை விட்டு விடவும் நீ விரும்பவில்லை. பணத்திற்காக உன் அப்பா கட்டளையை மீறவும் விரும்பவில்லை. ஆனால் துணிந்து உன்னால் முடிவு எடுக்க முடியவில்லை... ஆனால் நீ ஒரு ஆண் மகன்... அப்படித்தானே?"

மனத்தை ஆழ அளந்து கொண்டிருக்கும் என் பேச்சால் செல்வன் திகைத்தான்.

"ஆமாம் செல்வி! சரியாகச் சொல்லிவிட்டாய். எப்படி உன்னால் சரியாகக் கணிக்க முடிகிறது? ஜோதிடமும் படிக்கிறாயா?" என்று கூறிய செல்வன், என் விரல்களை அழுத்தினான்.


Compiled by lavan_joy

அது வழக்கத்திற்கு மாறான புதிய செய்கை.

"செல்வன்! உன் உள் மனம் இப்போது வெளிப்படுகிறது. நானும் முனைவராகி, நீயும் முனைவராகிச் சாதனை புரிய வேண்டும் என்று நான் கனவு காண்கிறேன். அந்த அடிப்படை ஆதாரம் நம்மிடையே பலமான பிணைப்பை ஏற்படுத்துகிறது."

"என் எண்ணமும் அப்படித்தான் செல்வி. முதலில் உன்னைப் பார்த்தபோது நீ என்னை முழுமையும் விழுங்கிவிட்டாய். எனக்கே வியப்பாக இருந்தது. அவ்வளவு எளிதில் வசதிமிகுந்தவர் வீட்டு அழகு மங்கை நம்மை விரும்புகிறாளா என்று வியந்தேன். ஆனால்..."

"சொல்லு... என்ன ஆனால்?..."

"என் வீட்டுப் பொருளாதாரப்பிரச்னை. அப்பா இன்னும் ஆறு மாதங்களில் பணி ஓய்வுப் பெறுகிறார். அவருக்கு வர வேண்டிய பணம் எல்லாம் என்



நமோ வெங்கடேசா என்ற தெலுங்குப் படத்திற்காக அக்லேண்டிற்கு 25 நாள் படப்பிடிப்பிற்கு சென்று திரும்பினார் நடிகை திரிஷா. இப்போது திரிஷா மீண்டும் தமிழ் தெலுங்குப் படங்களில் நடிக்கச் சம்மதித்து வருகிறார்.

- க.ரவீந்திரன்

Compiled by lavan_joy

தங்கைக் கல்யாணத்திற்கு வாங்கும் கடனுக்குச் சரியாகிவிடும். தாயற்ற என் சகோதரி மனம் கோணாமல் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும். நான் நல்ல வேலைக்குச் சென்று மாதச் சம்பளம் கொண்டு வந்தால்தான் உண்டு. நம் ஆராய்ச்சிக்குக் கிடைக்கும் பெரிய 'டிகிரி'கள் உடனே வருவாயைத் தருவது சந்தேகமே. புகழ், பெருமை அவ்வளவுதான் கிடைக்கும். என் தந்தை பணத்தைத்தான் விரும்புகிறார். தன்னுடைய இறுதிக் காலம் வரைப் பணக் கஷ்டமின்றி வாழ விரும்புகிறார். அதனால்தான்..."

செல்வன் கூறிய மெய்யான வெளிப்பாட்டை நான் தெரிந்து கொண்டேன். அவன் கருத்து நியாயமானதுதான். என்னிடம் அவனுக்கு ஈடுபாடு இருப்பது போலித்தனமன்று எனப் புரிந்து கொண்டேன். அன்று முழுவதும் சிந்தித்தேன். மனக் குழப்பங்களைத் தீர்க்கும் ஆராய்ச்சிப் படிப்பை ஏற்றுக் கொண்டுள்ள நான், எனக்கேற்பட்டுள்ள குழப்பத்தைத் தீர்க்க முடியாதா? இந்த நல்ல தருணத்தை நான் நழுவ விடலாமா?

"செல்வன்! நான் முடிவொன்று சொல்கிறேன். ஏற்பாயா?"

"உன்னை எப்படிப் பிரிவது, மறப்பது என்றுதான் ஒவ்வொரு நொடியும் யோசித்து வருகிறேன். உன்னை உயிருள்ள அளவும் மறக்க முடியாது; பிரிய முடியாது. வேலை கிடைத்துவிட்டால் மும்பையோ அல்லது மேல் நாட்டிற்கோ போய் விடுவேன். என் படிப்பிற்கும், வேலைக்கும் போட்டிப் போட்டுக் கொண்டு பெண் கொடுப்பார்கள். கல்யாணமும் ஆகிவிடும். அப்படி நடந்து விட்டாலும், நீ சம்மதித்தால் உன் உறவை முறித்துக் கொள்ளாமல் இருப்பேன். இது மற்ற சராசரி இளைஞனைப் போன்ற முடிவு. சரியா, நியாயமா? குழம்புகிறேன் செல்வி."

நான் அப்போது படித்துக் கொண்டிருந்த கனமான புத்தகத்தால் அவன் முதுகில் தட்டி, "ஆண்கள் இயற்கையிலேயே கோழைகள்; சுயநலவாதிகள். இலட்சியம் – கொள்கை

**உதடு பளபளப்பாக...**

**கொ**ஞ்சம் கடுகை எடுத்துக் கொண்டு இரண்டு சொட்டு எலுமிச்சை சாறு, கிளிசரின் 2 சொட்டு, ரோஸ்வாட்டர் 2 சொட்டு இவற்றை கலந்து நன்கு அரைத்துக் கொண்டு, அதை தினமும் உதட்டில் தடவி வந்தால் உதடுகள் பளபளப்பாக மின்னும்.

– சி.ரகுபதி, போளூர்



Compiled by lavan_joy

என்பனவெல்லாம் தொடக்கக் காலத்தில்தான். நீயும் அந்தச் சராசரி இளைஞனாக இருக்க விரும்புகிறாயா? இந்தச் சமூகத்தை எதிர்த்து நிற்க முடியாதா? உன் தந்தையோடு வாதாடி வெற்றி பெற முடியாதா? ஆனால், தந்தையற்ற நான் உறுதியான முடிவொன்று எடுத்துவிட்டேன். உன்னை என்னால் பிரிய முடியாது. நீயில்லாமல் நான் வாழ விரும்பவில்லை. இது நாடகத் திரைப்பட வசனமில்லை. நான் முனைவர் ஆராய்ச்சியை விட்டுவிடுகிறேன். இருவருக்கும் நல்ல நிறுவனத்தில் பணி கிடைக்கும். உன் வீட்டுச் செலவுக்கு உன் சம்பளத்தைக் கொடுத்து விடு. நம் குடும்பத்தை என் வருவாயின் மூலம் நடத்துவோம். நான் இன்று, இப்போது உத்தியோகத்திற்குச் சென்றால் எவ்வளவு சம்பளம் கிடைக்கும் தெரியுமா? இப்போதே அழைக்கிறார்கள்..."

"தெரியும். நாற்பதாயிரம். அதே அளவுக்கு எனக்கும் கிடைக்கும்."

ஒரு கணம் நான் யோசித்தேன். "உன் தந்தையின் விருப்பப்படி நீ நடந்து கொள். ஆனால், என்னைத்தான் மணக்க வேண்டும். உனக்காக என் ஆராய்ச்சியை நான் கைவிட்டு விட்டால் உன்னையும் அடையாமல் என் இலட்சியப் பட்டப்படிப்பையும் அடையாமல் தியாகியாக முடியாது. அரசனை நம்பி நல்ல புருஷனைக் கைவிட்டு விட்டதாகி விட்டால்?"

செல்வன் சிறிது நேரம் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென கரங்களைப் பிடித்துக் கொண்டான். "செல்வி! நானும் ஏறத்தாழ நீ நினைத்ததையே நினைத்தேன். நான் வேலைக்குச் செல்வது. ஆனால், அப்பா சொல்பவளைக் கல்யாணம் செய்து கொள்ள மறுப்பது. உன்னை மணப்பது. இப்போதைக்குக் குடும்பம் நடத்துமளவுக்கு உன்னிடம் பணம் இருக்கிறது. உன் தந்தை புண்ணியவான். சேர்த்து வைத்து விட்டுச் சென்றிருக்கிறார். என் அப்பாவுக்கு வேண்டியது பணம் தான். அதை நீ உதவலாம்" என்றான்.

அவன் கண்கள் பனித்திருந்தன. மெய்யாகவே என்னை மணம் புரிந்து கொள்ள அவன் விரும்புகிறான் என்பதை உணர்ந்தேன். வேறு ஒருத்தியை மணந்து என்னுடனும் தொடர்பு கொள்வதை நான் ஏற்க மாட்டேன் என்பது அவனுக்குத் தெரியும். ஆனால், சில சமயங்களில் அவன் வெளிப்படுத்தும் சொற்கள் மட்டும் எனக்குப் பிடிக்கவில்லை.

"செல்வி! இறைவன் கொள்ளையழகை உனக்குக் கொடுத்திருக்கிறான். அறிவுடன் வனப்பையும் சேர்த்திருக்கிறான். ஒவ்வொரு நாளும் நீ காணாத வேளையில் உன்னைப் பார்க்கும்போதே, அப்போதே அந்த நொடியிலேயே..." என்று காம விகாரத்துடன் கூறும்போது நான் பல தடவைகள் அவன் வாயைப் பொத்தியிருக்கிறேன். செல்லமாகக் கன்னத்தில் தட்டியிருக்கிறேன்.


Compiled by lavan_joy

“நான் நினைப்பது நியாயமானது. ஆனால், என் நண்பர்களும் உன்னை மானசீகமாக உன் வளமான உடலைப் பற்றிப் பேசும்போது உன்னை நான் இழக்க விரும்பவில்லை என்பதை உறுதி செய்துவிட்டேன்”

காலம் அப்படியே நிற்பதில்லை. நம் சங்கடம், வேதனை இவற்றுக்குப் பரிகாரம் கண்டு நிறைவேற்ற நிற்பதில்லை. நான் மாநிலத்திலேயே அதிக மதிப்பெண் பெற்றுத் தேர்ந்து முனைவர் பட்டம் பெற்று விட்டேன். செல்வனை மணந்து கொண்டேன். ‘தற்காத்துத் தற்கொண்டாளும் சக்தி’ இருந்தது.

அன்று கல்லூரிக்குப் புறப்படும்போது நான் வசிக்கும் மூன்றாவது தளத்தின் கதவை மெல்லத் தட்டும் ஓசை கேட்டது. பொதுவாக என்னைத் தேடி காலையில் யாரும் வருவதில்லை. நானும் விரும்புவதுமில்லை. குடும்ப வரவு– செலவுகளைக்கூட ஞாயிறன்றே வைத்துக் கொள்வேன். காலை வேளையில் ஒவ்வொரு நொடியும் பொன் போன்றது என்று தொடக்கத்திலேயே என் அன்றாடப் பணியை விவரித்திருக்கிறேனே!

கதவைத் திறந்தேன். அந்த நான்கு மாடிக் குடியிருப்பின் காவலர் நின்றிருந்தார். அழைப்பு மணியை என் குடியிருப்பில் துண்டித்துவிட்டேன். கதவைத் தட்டிய பிறகு யாரென்று அறிந்து தான் கதவைத் திறப்பேன்.

வெளி கேட் அருகே, ‘உங்களைப் பார்க்க ஒருவர் நின்று கொண்டிருக்கிறார். உங்கள் அனுமதியில்லாமல் அவரை நான் இங்கே அனுப்ப விரும்பவில்லை...” என்றார் காவலர்.

“என்னைப் பார்க்கவா?” – வியப்புடன் பால்கனி ஜன்னல் வழியாக வெளி வாசலை நோக்கினேன். அந்தத் தளத்தில் வசிக்கும் குடித்தனக்காரார் கார் வந்தால் மட்டும் பெரிய கதவைத் திறப்பார் காவல்காரர். தனிப்பட்டவர், மூன்றாவது மனிதர் வந்தால் வாயிலில் காவலர்களுக்கு கட்டப்பட்டிருந்த சிறு வரவேற்பறையில் உட்கார்ந்த பிறகு, அனுமதி கிடைத்த பிறகு வாயில் காப்பாளரே அழைத்து வந்து குடியிருக்கும் இடத்தில் விடுவார். மிக மரியாதையுடன் நடந்து கொள்வார். அந்நியர் தொந்தரவு, வேறு வித அச்சம் ஏற்படாமலிருக்க அந்தக் குடியிருப்பில் வசிப்பவர்கள் ஒன்று சேர்ந்து எடுத்த முடிவு. நல்ல திட்டம். தபால்கள், கடிதங்கள் கீழே உள்ள பெட்டியிலேயே போடப்படும்.

பால்கனி வழியே நான் கூர்ந்து கவனித்தேன். ஒரு கணம் உடலில் புரிய முடியாத உணர்ச்சி. செல்வன்தான் நின்று கொண்டிருந்தான்.

“என்ன பெயர் சொன்னார் அவர்?” என்று காவலாளியிடம்


Compiled by lavan_joy

கேட்டேன்.

"செல்வன் என்றார். இந்த விசிட்டிங் கார்டைக் கொடுத்தார்" என்றார் காவலர்.

'செல்வன்' – ஒருமுறை பெயரை முணுமுணுத்தேன். பூர்த்தியாகாத பட்டங்கள். முனைவர் பட்டம் அவன் பெறவில்லை. 'இவன் இப்போது ஏன் இங்கே வருகிறான்?' கவலையுடன் சேர்ந்த எண்ணத்துடன் நான் ஒரு கணம் நின்றேன்.

எந்தச் செல்வனைக் காணாமல் ஒருநாள்கூட என்னால் தாங்க முடியாது தவிப்பேனா அதே செல்வன் வருவது எனக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்தது. அவனிடம் உள்ள காந்தம் போன்ற ஈர்ப்புச் சக்தியைக் கண்டு வியந்துதான் மனத்தைப் பறிகொடுத்தேன்.

"நான் இருக்கிறேன் என்று அவரிடம் சொன்னாயா?" என்று பதற்றத்துடன் கேட்டேன். காவலர் விழித்தார். அவர், அவனிடம் ஏதும் சொல்லவில்லை.

"போய்ப் பார்த்து வருகிறேன். அம்மா சொன்னால்தான் நான் உங்களை உள்ளே அனுமதிக்க முடியும்' என்று சொன்னேன். 'நீ போய்ச் சொல். அம்மாவே இங்கே ஓடோடி வருவார்' என்று கூறுகிறார்.

நிமிடக் கணக்கில் திட்டமிட்டுப் பணியாற்றும் எனக்கு, கீழே காவலாளி அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் செல்வனைத் தவிர்த்து எப்படி வெளியே செல்வது என்பது கவலையாகிவிட்டது. பிள்ளையாரைக் கும்பிடச் செல்ல முடியவில்லை.

'இன்று நாள் பார்த்துக் கொள்ளப்பா, பிள்ளையாரப்பா! எனக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டு உனக்குத் தெரியாதா!' என்று 'புத்தி' போட்டுக் கொண்டு முதலில் விமலாவைக் கல்லூரி அனுப்பி வைப்பதற்கு ஆயத்தப் படுத்தலானேன். செல்வன் வந்திருப்பது அவளுக்குத் தெரியக்கூடாது.

"அம்மா சீக்கிரமாக ஆபீஸ் போய்விட்டதாகச் சொல்லிவிடு. எப்போது வருவார்கள் என்று கேட்டால் தெரியாது என்று சொல்லி விட்டு, அந்த ஆளை அங்கே நிற்கவிடாமல் அனுப்பி விடு. இந்தியிலேயே பேசு" என்று சொல்லி அனுப்பிவிட்டேன். பிறகு விமலாவைக் கல்லூரிக்குச் செல்லத் துரிதப்படுத்தினேன்.

"ஜாக்கிரதையாக கல்லூரி பஸ்ஸில் போய் நேரத்திற்குத் திரும்பி வந்துவிடு" என்று நான் சொல்வதைக் கேட்டு விமலா வியப்புடன் என்னைப் பார்த்தாள். அவள் செல்லும் வரையில் காவலாளி அங்கேயே நின்று கொண்டிருந்தார்.


Compiled by lavan_joy

செல்வன் கையில் தோல் பை, மற்றுமொரு துணிப்பையுடன் அங்கிருந்து செல்வதைப் பார்த்துக் கொண்டே நின்றேன். மனத்தைக் கல்லாக்கிக் கொண்டேன். இந்த மனத் தத்துவத்தை ஆராய முடியவில்லை.

'உன்னை நீ அறிந்து கொள்' என்பார்கள். என்னை நானே உணர முயல்கிறேன்... முடியவில்லை.

அலுவலகத்தில் என் நெருங்கிய சிநேகிதி மேரி என் முக மாறுதலைக் கண்டு காரணம் கேட்கிறாள். எனக்கு ஒரு குரல் அழ வேண்டும் போலிருந்தது.

என்னைப் பற்றிய கதை முழுமையும் அவளுக்குத் தெரியும். செல்வனைப் பற்றி அவளிடம் சொல்லியிருக்கிறேன். யாரிடமாவது நம்பிக்கையானவர்களிடம் நம் மனப் பாரத்தை வெளியிட்டுக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

"விமலாவுக்குப் பன்னிரண்டு வயதிருக்காது, இப்போது?" என்று மேரி கேட்டாள். என் விழிநீரைத் துடைத்துக் கொண்டு 'ஆமாம்' என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தேன். சிறிது நேரம் மௌனமாயிருந்தேன். பேருந்திலும் இப்படியே கண் கலக்கத்துடன் வந்தேன்.

"செல்வி! நடந்ததைச் சொல்லேன். மௌனமாயிருந்தால் மனப்பாரம் அதிகமாகும். உன் கணவர் செல்வனைப் பன்னிரண்டு வருடங்கள் கழித்துப் பார்க்கிறாய். அப்படித்தானே? இடையே உன்னையும் தன் மகளையும் சந்திக்க அவர் வரவில்லையா? பிள்ளையார் கோயிலில் வைத்துப் பார்த்துப் பேசி வீட்டுக்கு அழைத்துப் போயிருக்கலாம்" என்றாள் மேரி, நான் செய்தது தவறு என்பதைச் சுட்டிக்காட்டி.

அழுகை நின்றது; ஆத்திரம் வந்தது. "பன்னிரண்டு வருடங்களில் இரண்டு தடவை அவனைப் பார்த்திருக்கிறேன். இப்பொழுது அவனைப் பார்க்கவும் அவன் நிழல் படக்கூட நான் விரும்பவில்லை" – இப்போது விழி நீர் குறைந்தது; ஆத்திரம் வந்து பதில் சொன்னேன்.

"அப்படிச் சொல்லாதே செல்வி! நடந்தது நடந்துவிட்டது. இனி நடப்பவை நல்லதாக இருக்க வேண்டும். மனம் திருந்திக் கணவன் வீடு வருகிறான் என்றால் மன மகிழ்ச்சியுடன் அவனை அழைக்க வேண்டும். நடந்து போனவற்றைக் கனவாக நினைக்க வேண்டும். உனக்கு நான் சொல்லித் தர வேண்டுமா? இன்று ஒருநாள் விடுப்பு எடுத்துக் கொண்டு மனம் விட்டுப் பேசி, பிளவைச் சரி செய்திருக்க வேண்டும். அரிய சந்தர்ப்பம் கிடைத்ததை நழுவ விட்டதாகவே தோன்றுகிறது. உனக்குக் கணவன் கிடைத்ததை விட விமலாவுக்கு அப்பா கிடைத்து விட்டாரில்லையா? அந்தப் பிஞ்சு உள்ளத்தில் இதுவரையில் தேங்கியிருந்த ஏக்கம் போயிருக்கும்.


Compiled by lavan_joy

அவளுடைய சிநேகிதிகள் 'உன் அப்பா எங்கே?' என்று கேட்கும்போது நீயா, பதில் சொல்கிறாய்? அவள் என்னவென்று சமாதானம் சொல்வாள்? வேதனை வராதா? தீராத வடுவொன்று ஏற்பட்டு விடாதா? உன்னைப் பற்றியும் அவள் என்ன முடிவெடுப்பாள்?" என்று என் தோழி கேட்பதில் நியாயமும் என் மீது அக்கறையும் இருந்தன.

மேரியிடம் பல முறை நடந்த சம்பவங்களைத் தொடக்கத்திலிருந்து விவரித்திருக்கிறேன். தந்தையின் பெரும் எதிர்ப்புக்கிடையே செல்வன் என்னை மணம் புரிந்து கொண்டான். பதிவுத் திருமணம். என் தாயாரும் அவன் அப்பாவும் அங்கும் வரவில்லை. திருமணச் சான்றிதழைக் கொண்டு கொடுத்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டோம்.

வேண்டா வெறுப்பாக செல்வனின் தந்தை என் தலையில் அட்சதையைத் தூவியவாறு, "உன் வீடு எவ்வளவு மதிப்புப் பெறும்?" என்று கேட்டார்.

செல்வன் என்ன சொல்லியிருந்தானோ... அவர் எதிர்பார்த்த மருமகள் கிடைக்கவில்லை. ஆனால், அவர் எதிர்பார்த்ததை விட அழகாக, படித்தவளாக நான் கிடைத்ததில் அவருக்கு உள்ளூர மகிழ்ச்சிதான். அதை அவ்வளவு எளிதில் புலப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. இன்னும் அதிகம் பணம் பறிக்கத் திட்டமிட்டிருந்தார்.

"முனைவர் படிப்பைப் பாதியில் விட்டுவிடப் போகிறாயாமே? நீ வேலையில் சேரப் போகும் கம்பெனி உலகத்திலேயே மிக சிறந்தது. என்ன சம்பளம் தொடக்கத்தில்?" என்று மாமனார் கேட்டார். உடனே அறிந்து கொள்ள அவருக்கு ஆசை.

செல்வன் ஜாடை செய்தான். நான் சொல்வதற்கு முன்பு அவனே குறுக்கிட்டான். "நான்தான் சொன்னேனே அப்பா. முதலில்

## கழுத்தில் கறுப்பு கறை நீங்க...

பெண்கள் கழுத்தில் தாலிச்சரடு போடுவதால் கழுத்தைச் சுற்றி ஒரு கறுப்பு நிறம் இருக்கும். அதைப் போக்க கடையில் மாங்காய் பொடி (உலர்ந்தது) கேட்டால் கிடைக்கும். அதை தண்ணீரில் நான்கு மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பிறகு அதை விழுதாகக் குழப்பிக் கொண்டு கழுத்தில் தடயம் இருக்கும் இடத்தில் இரவு படுக்கும் போது தடவிக் கொண்டு படுங்கள். மறுநாள்காலை எழுந்து கழுத்தை கழுவி சுத்தம் செய்ய வேண்டும். இவ்வாறு சில தினங்கள் தொடர்ந்து செய்து வந்தால் அந்தக் கறுப்பு நிறம் மாறி தோல் அதன் ஒரிஜினல் நிறத்திற்கு மாறும். இதே விதிமுறையைப் பெண்கள் இடுப்பில் பாவாடை கட்டுவதால் ஏற்படும் கறுப்புக் கறை நீங்கவும் பயன்படுத்தலாம்.

**- சி.ரகுபதி, போளூர்**


Compiled by lavan_joy

நாற்பதாயிரம், போகப் போக உயரும்" என்றான். தொடர்ந்து, "இந்த வீட்டிலிருந்துதான் செல்வி அலுவலகம் செல்லப் போகிறாள். அம்மாவைப் பார்த்துக் கொள்ள வேலைக்காரி ஒருத்தியை வீட்டோடு நியமித்திருக்கிறாள். தன் அம்மாவை இவள் வாரம் ஒரு தடவைப் பார்த்து வருவாள்" என்றான்.

அதாவது சம்பளக் கவர் இங்குதான் சமர்ப்பிக்கப்படும் என்பதன் மறைபொருள், இவ்வளவு கேள்வி – பதில்களும்.

தலையசைத்தார், மாமனார் வடிவில் இருக்கும் பணப்பேய்! "செல்வன் எல்லாம் சொல்லியிருக்கிறான். உன் வீட்டு வாடகைப் பணத்தை உன் அம்மா எடுத்துக் கொள்வாளோ?" என்றும் அவர் கேட்கத் தவறவில்லை. என் நெஞ்சை அழுத்துவதாக உணர்ந்தேன். அப்போதே செல்வன் மீது கடுங்கோபம் ஏற்பட்டது. வீட்டு வாடகைப் பணத்தையும் கொண்டு கொடுத்துவிட்டால், அம்மாவை முதியோர் இல்லத்தில் சேர்ப்பதா? நான் செல்வனிடம் சீறினேன்.

"உன் அப்பா கேட்பது சரியில்லை" என்ற வார்த்தைகளை ஆங்கிலத்தில் முணுமுணுத்தவுடன்,



**பி**ரபஞ்ச அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட வெனிசுலாவைச் சேர்ந்த ஸ்டிபினியா பெர்னாண்டஸ் குரூப்ஜி பழுப்பு நிறக் கண்ணழகி ஆவார். 18 வயதான இவர் 5 அடி 10 அங்குல உயரமுடையவர். உலகெங்கிலும் மனிதாபிமானத்தை வலியுறுத்தவும் எயிட்ஸை ஒழிக்கவும் இவர் பிரச்சாரம் செய்யப் போகிறாராம். இவர் ருஷ்ய போலந்து வம்சாவளியைச் சேர்ந்தவர்.

- க.ரவீந்திரன்

Compiled by lavan_joy

செல்வன் பேச்சை மாற்ற விரும்பி, என் அருகே வந்து, "வா! வெளியே போய்ப் பேசிக் கொள்ளலாம்" என்று அழைத்து வந்துவிட்டான்.

அந்த வயதில் என்னை ஆட்கொண்டது செல்வனுடைய அறிவா, பண்பா, அழகா... எல்லாம் புரிந்து கொள்ள முடியவில்லை. எல்லாவற்றையும் மீறி, செல்வனோடு சேர்ந்து வாழ்கிறோம் என்ற ஆனந்தமே என்னைத் தியாகங்கள் பல செய்யத் தூண்டின. மெய்யாகவே முதல் சில மாதங்கள் எனக்கேற்பட்ட குதூகலத்திற்கு எல்லையில்லை. "நான் விரும்பித்தானே, என் ஊதியத்தைத் தருவதாகக் கூறினேன். வீட்டு வாடகையையும் கொடுப்பதாகச் சொல்லவில்லையே. உன் அப்பா எல்லாவற்றையும் அகப்படுத்தப் பார்க்கிறாரா" என்றேன்.

"ஹனி! என் அப்பா குணம் இந்த சில நாள்களிலேயே உனக்குப் புரிந்திருக்கும். உனக்குச் சொல்லி தர வேண்டுமா? வீட்டு வாடகைப் பணம் என்று கூறி மாதா மாதம் தொகை தந்து சமாளித்துக் கொள்ளலாம்" என்று செல்வன் யோசனை கூறும்போது கூட, அவன் வசம் இருந்த மோகத்தால் தலையசைத்தேன். திருமணத்திற்கு முன்பு இருந்ததைவிட, என்னிடம் அவன் செலுத்தும் பாசம் – காதல்– உரிமை அதிகமாயிருந்தன.

பெங்களூரு, ஊட்டி என்று தேனிலவுக்காகச் சுற்றினோம். கோயம்புத்தூரில் இருக்கும்போது, செல்வனின் தந்தை உடல்நலம் பாதிக்கப்பட்டது என்ற செய்தி வந்தது. நாங்கள் விரைந்து வருவதற்குள், திரை விழுந்துவிட்டது.

செல்வனின் சோகத்தை என் இனிய மொழிகளால் தேற்றினேன். இதழ்களால் தேற்றியபோதுதான் அவன் அமைதியானான். அப்போது தான் நான் அவனைச் சிறிது புரிந்து கொண்டேன்.

இனி என் சம்பளத்தை அவன் தந்தையிடம் தர வேண்டாம், அப்பாடா என்ற நிம்மதி ஏற்பட்டது. ஆனால், அவன் எதிர்பார்த்தபடி, தந்தையின் வங்கியில் இருப்பு ஏதுமில்லை. அதற்கு மாறாக அவர் கையெழுத்திட்ட கடன் பத்திரங்கள் இருந்தன. தங்கையின் திருமணத்திற்காக வாங்கிய கடனுக்கு அவன் வீட்டை விற்க நேர்ந்தது.

"அதனாலென்ன செல்வன்? கடவுள் நமக்கு வீடு கொடுத்திருக்கிறார். உன் வீட்டை விட விசாலமானது, என் அப்பா கட்டிய வீடு. நமக்காகவே அவர் கட்டி வைத்திருக்கிறார்" என்று செல்லமாக அவன் கன்னத்தில் கிள்ளினேன். அவன், அந்தக் காம சேட்டைகளை அதிகம் விரும்பினான். அவனுடைய அன்பும் ஆசையும் காம வயப்பட்டது என்பதை மேலும் உணர்ந்தேன்.


Compiled by lavan_joy

சில நாள்களாக அவனிடம் மாறுதலைக் கண்டேன். அவனிடம் நான் கிசுகிசுத்துச் சொன்ன வார்த்தைகளிலிருந்து அவன் உற்சாகமிழந்தான். "செல்வன்! ஒரு நல்ல செய்தி. நீங்கள் அப்பாவாகப் போகிறீர்கள்" என்று நான் கூறியபோது அவன் மகிழ்ச்சியடையவில்லை. என்னைத் தூக்கிக் கொண்டு ஆனந்தக் கூத்தாடுவான் என்று பயந்து சற்று விலகி நின்றே சொன்னேன்.

"என்ன அவசரம் செல்வி?"என்று மட்டும் கூறினான்.

எனக்குத் தெரியாதா? புதிதாகத் திருமணமானவர்கள் ஹனிமூன் டேயிலிருந்து பத்தாவது மாதத்தில் குழந்தையை எதிர்பார்க்கிறார்கள் சிலர். இளமை லீலைகளில் குறுக்கிட குழந்தைப் பெறுவரைத் தள்ளிப்போடச் சிலர் விரும்புகிறார்கள். செல்வன் இரண்டாவது ரகம்.

புதியதாக மணந்த இளம் ஆண்களுக்குரிய யோசனையை அவன் என்னிடம் சொன்னான்.

"இந்தக் குழந்தை வேண்டாம். என் வருமான நிலைமைச் சிறிது சரியான பிறகு, வேண்டிய குழந்தைகளைப் பெற்று கொள்ளலாம்" என்று செல்வன் சொன்னதை ஏனோ மறுக்கவில்லை. ஆனால், அவன் மனத்திற்குள் கள்ள எண்ணம் துளிர்விட்டிருந்ததை நான் உணரவில்லை. இளம் பருவத்திற்கேற்ப இன்பத்தை – குழந்தைப் பேறு காலம் வரையில் தள்ளிப் போடுவதை அவன் விரும்பவில்லை. குழந்தையை எந்த வயதிலும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால், துடிப்புள்ள இளமையை அனுபவிக்கும் காலத்தை வீணடித்து விடக்கூடாது என்று சொன்னான். அவனுக்கு உடலின்பம்தான் முக்கியம் என்பதை நான் உணர்ந்தேன்.

அவன் வற்புறுத்தலால் திடீர் கரு கலைப்பு செய்து கொண்டேன். என் உடல் நிலைப் பாதித்தது. பெரும் பணச் செலவு செய்து மீண்டும் பழைய செல்வி ஆனேன். உடல் நிலையைச் சரிசெய்து கொண்டேன்.

ஒருநாள் செல்வன், கடிதம் ஒன்றை என்னிடம் கொடுத்தான். அதில் ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்று அவனுக்கு நல்ல ஊதியத்தில் வேலை தர முன் வந்திருந்தது. எப்போது அவன் ஆஸ்திரேலியக் கம்பெனிக்கு விண்ணப்பித்தான் என்பதே எனக்குத் தெரியாது. அதிர்ச்சியாகவும் வருத்தமாகவும் இருந்தது. அந்தரங்கமாக, மிகவும் நெருக்கமாகப் பழகுவது போல் நடிக்கிறானா? சந்தேகத்தை நான் அடக்கிக் கொண்டேன். வளர விடவில்லை.


Compiled by lavan_joy

"செல்வி! உன் வேலையை ராஜினாமா செய்துவிடு. ஆஸ்திரேலியா சென்று விடுவோம். அந்த நாட்டுச் சுற்றுச்சூழல் உனக்கும் ஆரோக்கியமாக இருக்கும். நிறைய ஓய்வை அனுபவிக்கலாம்" என்று சொன்னான். அந்த யோசனை எனக்குப் பிடிக்கவில்லை.

கல்லூரியில் என் பணி நிர்வாகத்தைப் பெரிதும் கவர்ந்திருந்தது. என் சம்பளம் எதிர்பாராமலேயே உயர்ந்தது. உனக்குத் தெரியும். ஐந்தாண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்து கொடுத்திருக்கிறேன். மேலும் இவ்வளவு காலம் நெருங்கிப் பழகி வரும் உடன் பணியாற்றும் ஆசிரியைகளை விட்டுச் செல்ல விருப்பமில்லை. ஆஸ்திரேலியா செல்ல எனக்கு மனம் வரவில்லை. அவன் யோசனையை நான் மறுத்துவிட்டேன். செல்வன் மட்டும் ஆஸ்திரேலியா சென்றான். செல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு வரை அவன் என்னை விட்டு கணநேரங்கூடப் பிரியவில்லை. என் உள்ளத்தை விட உடலை மிகப் படாத பாடுபடுத்தி விட்டான். அவனுடைய பாசம் போதும் போதுமென்றாகி விட்டது.

மேரி உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வேன். ஆஸ்திரேலியா சென்ற பிறகு இரண்டு நாள்களுக்கு ஒருமுறை தொலைபேசியில் பேசுவான்.

## தாலி

அன்று
பாசத்துடன் கட்டிய கயிறு
இன்று
பாசக் கயிறாயிற்று...
ஆம்... வரதட்சணைக் கொடுமை...!

## முதிர்கன்னி

புழுக்கத்தில்
தவிக்கும் காற்று...
– முதிர்கன்னி...!

- குடந்தை பாலு

கடிதங்களில் காதல் ரசம் சொட்டச் சொட்ட எழுதுவான். அவற்றில் சில வரிகள் படிக்கக் கூசும், அருவருப்பாகவும் இருக்கும். அவற்றை நான் உடனே கிழித்துப் போட்டு விடுவேன். ஒரு வருடம் வரையில் அவனுக்கு விடுப்பு கிடையாது. ஆஸ்திரேலியா அருகிலேயா இருக்கிறது?

'பிரிவை மெல்லத் தாங்கிக் கொள். ஒரு மாதம் விடுப்பில் வந்து பிரிந்திருந்த காலத்துப் பாசப் பிணைப்பை வட்டியும் முதலுமாகச் செலுத்தி விடுகிறேன்' என்று கடிதத்தில் எழுதுவான். தமிழில் எழுதுவதைவிட ஆங்கிலக் கடிதங்கள் காதல் ரசம் சொட்டச் சொட்ட இருக்கும். அருவருப்பாக இருக்கும். என் உடல் மெல்ல நடுங்கும். அவன் எழுதிய கடிதத்தைப் பிரிக்கவே பிடிக்காது. இப்படி ஒரு காதல் பாசமா? 'தொலைபேசியில் முகம் தெரிந்தால் பார்... என்


Compiled by lavan_joy

## யோசனை

**க**த்திரிக்கோல் முனை மழுங்கினால் அதை மெலிதான அலுமினிய தகடுகளை நாலைந்து முறை வெட்டினால் மீண்டும் கூர்மையாகும். அல்லது உப்புத்தாளை வெட்டினாலும் அது கூர்மையாகும்.

***

**நீ**ங்கள் வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகளின் உடம்பில் சிறுசிறு பூச்சிகள் இருந்தால் வேப்பிலைக் கொழுந்து இலைகளைப் பறித்து நன்றாக அரைத்து அதை அந்த செல்லப்பிராணி உடம்பு மீது தடவி விட வேண்டும். சில மணி நேரம் கழித்து அதைக் குளிப்பாட்டி விட்டால் அதன் உடம்பில் இருந்த பூச்சிகள் வேப்பிலையின் கசப்புக்கு கீழே உதிர்ந்து விடும்.

**- சி.ரகுபதி, போளூர்**

கண்கள் குளமாகி விட்டிருப்பதை' என்று எழுதுவான்.

அவன் கூறியபடியே ஓராண்டு கழித்து விடுப்பு எடுத்துக் கொண்டு வந்தான். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா? என்னைப் பேச எங்கே அனுமதித்தான்? ஒரு மாத விடுப்பை இரண்டு, மூன்று மாதங்களுக்கு நீட்டித்தான். அவனுடன் இருப்பதில் எனக்கும் மகிழ்ச்சிதான். சில வேளைகளில் திகட்டியது. ஏதாவது காரணம் கூறி மறுத்தேன். என் உடலில் மாறுதல் ஏற்பட்டதை உணர்ந்தேன்.

அவன் ஆஸ்திரேலியாவுக்குப் புறப்படுவதற்குச் சில நாள்கள் முன்புதான் நான் கருவுற்றிருப்பதை தெரிவித்தேன். குழந்தை பிறப்பதை அவன் தடுக்கவில்லை. 'குழந்தை பிறக்கும் வரை விடுப்பை நீட்டிக்கட்டுமா?' என்று கேட்டான். நல்ல வேளையாக அவன் அலுவலகத்திலிருந்து கண்டிப்பான கடிதம் வந்து விட்டது. எனக்குப் புகுந்த இடம், பிறந்த இடம் ஏதுமில்லை. முதல் குழந்தையைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. என்னை அழைத்துச் சீராட்ட யார் இருக்கிறார்கள்.

குழந்தை பிறந்ததும் விமலா என்று அவன்தான் தொலை பேசியின் மூலம் பெயர் சூட்டினான். 'உடனே பார்க்க வேண்டும் போலிருக்கிறது' என்ற ஏக்கக் கடிதங்கள் நாள்தோறும் பறந்து வந்தன. தொலைபேசி வழி வார்த்தைத் தொல்லையும் அதிகம்.

**ஒ**ருநாள் திடீரென்று முன் அறிவிப்பின்றி பறந்து வந்து விட்டான். விமலாவின் மழலையை ரசித்தான். அவளை விட்டுப் பிரியாமலேயே கொஞ்சிய வண்ணம் இருந்தான்.

"எவ்வளவு நாள்கள் விடுப்பு?" என்று



Compiled by lavan_joy

கேட்டேன்.

"உன்னையும் விமலாக் கண்ணுவையும் விட்டுவிட்டு நான் திரும்பவும் ஆஸ்திரேலியா செல்லப் போவதில்லை" என்ற வெடி குண்டை வீசினான்.

எனக்கும் முதலில் திருப்திதான். வேலைக்காகப் பல இடங்களுக்கு அலைந்தான். வடக்கே புவனேஸ்வரத்தில் நல்ல சம்பளத்தில் அவனுக்கு வேலை கிடைத்தது. என் பதவியை ராஜினாமா செய்துவிட்டு வருமாறு இப்போதும் வற்புறுத்தினான். 'உன்னையும் குழந்தையையும் என்னால் பிரிந்திருக்க முடியவில்லை' என்று கண்ணீர் சிந்துவதுபோல் பேசினான்.

'கோடை விடுமுறையின்போது புவனேஸ்வரத்திற்கு வந்து உங்களுடன் ஒரு மாதம் தங்குகிறேன்' என்று சமாதானம் கூறி, சிறுமியைப் பள்ளிக்கூடம் அனுப்புவதுபோல் விடாப்பிடியாக அவனை அனுப்ப நான் பட்டபாடு அடேயப்பா!

விமலாவுக்கு ஓராண்டு பூர்த்தியாகியது.

விமலாவை கவனிக்க வீட்டோடு வேலைக்காரி ஒருத்தியை நல்ல சம்பளம் கொடுத்து நியமித்த பிறகு, நான் கல்லூரி செல்லத் தொடங்கினேன். வேலைக்காரி போன்றில்லாமல் செவிலித் தாயாக குழந்தையைப் பாதுகாத்தாள்.

எனக்கு முதல்வர் பதவி கிடைக்க நிர்வாகம் பரிந்துரைந்திருந்தது மேரி! அப்போதுதான் உன் அறிமுகம் கிடைத்தது. எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஏற்ற தோழி நீ என்று தீர்மானித்தேன்."

"காலம் கணவரைப் பிரித்திருக்கிறது என்கிற ஒன்றைத் தவிர உனக்கு வேறு ஒன்றும் குறையில்லையே, செல்வி!" என்று என் தோழி அன்புடன் ஆறுதல் கூறி என் கன்னத்தைத் தட்டினாள். அமுதமாக இனித்தது.

"மேரி ஓர் அதிர்ச்சியான செய்தி... புவனேஸ்வரிலிருந்து திடீரென ஒருநாள் செல்வன் புறப்பட்டு வந்துவிட்டான். அவனுடன் பெட்டி மற்றும் பண்டங்கள் தொடர்ந்தன. புருவத்தை உயர்த்தி என்னவென்று கேட்டேன். அவன் சிரித்தான்.

'உன்னை விட்டுப் பிரிந்திருக்க என்னால் முடியவில்லை. வேலையில் கவனமில்லை. சில நாள்கள் அங்கிருந்தால் என் நடத்தையே மாறிவிடுமோ என்று பயந்தேன். சென்னையிலேயே குறைவான சம்பளமாயிருந்தாலும்


Compiled by lavan_joy

ஏற்று உன்னுடனேயே இருக்கத்தான் ஒவ்வொரு நாளும் துடிக்கிறேன்' என்று என்னை அந்தப் பகல் வேளையிலேயே நெருங்கினான். அதில் காமம் அதிகம் இருந்தது. மற்றவர்கள் பார்ப்பார்களே என்ற கவலை அவனுக்கில்லை.

இரவில் வேலைக்காரி வீட்டிற்குப் போய் விடுவாள். விமலாவுடன் நான் ஓர் அறையில் படுத்தேன். செல்வனுக்கு மற்றோர் அறையில் படுக்கைக்கு ஏற்பாடு செய்தேன். அவன் சம்மதிக்கவில்லை.

'இவ்வளவு மாதங்கள் தனியாகப் படுத்தேன். இங்குமா இப்படி... உன் அணைப்பில்லாமல் உறக்கம் வராது' என்று கெஞ்சலும் கொஞ்சலும் சற்று அதட்டலும் நிறைந்து உரையாடினான். ஆண்களுக்குண்டான அசட்டுத்தனம் வழிந்தது.

என்னதான் மனோதத்துவம், மனித நேயம் என்று ஆராய்ச்சி செய்து அதில் கற்றுத் தேர்ந்திருந்தாலும், பெண்களுக்கு நல்ல யோசனை கூறும் கட்டுரைகளை மகளிர் பத்திரிகைகளில் எழுதியிருந்தாலும் ஆண்– பெண் உறவு பற்றி நல்ல முறையில் வழிகாட்டக் கூடிய நூல்கள் எழுதியிருந்தாலும் செல்வன் பிடிவாதம் வென்றது. எனக்குள் பெண்மை உணர்வு இல்லாமலா போய்விடும்? அவனைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது.

கட்டிலில் 'ஒரு நிபந்தனை. நீ அந்தப் பக்கம், விமலாக்கண்ணு நடுவில், நான் இந்தப் பக்கம்' என்று கூறினான். நாணம் விட்டுச் சொல்கிறேன் மேரி, நள்ளிரவிற்குப் பிறகு என் உறக்கம் சிறிது கலைந்தபோது செல்வன் இடம் மாறியிருந்தான். எனக்கு வெட்கமாகிவிட்டது. விமலா நான்கு வயதுக் குழந்தை. விவரம் இன்னும் புரியவில்லை. இன்னும் ஓராண்டுக்குப் பிறகு...

காலையில் மிகச் சோர்வுடனிருந்தேன். செல்வன் வெற்றிக் களிப்பில் இருந்தான். குளித்துப் புத்தாடை அணிந்து வெளியே புறப்பட ஆயத்தமானான். அன்றெல்லாம் எனக்குத் துக்கம்தான். செல்வனைப் பார்க்கவே பிடிக்கவில்லை. அவனைப் பார்க்கும்போது ஒருவித பய உணர்ச்சி ஏற்பட்டது. காமத்துக்கு வலிமை அதிகம் என்பதை உணர்ந்தேன்.

'உங்களுடைய தொந்தரவிலிருந்து நான் தப்பிக்கவே முடியாதா?' என்று ஆங்கிலத்தில் சீறி விழுந்தேன்.

செல்வன் சிரித்தான். 'இன்னும் இரண்டு நாள்கள்... நான் புதிய வேலைக்கு மும்பை செல்கிறேன். அதுவரை என்னைப் பட்டினி போடாதே' என்று கொஞ்சும் குரலில் கெஞ்சினான்.


Compiled by lavan_joy

'அதிகம் சாப்பிட்டால் அமுதமும் விஷமாகும்' என்று எச்சரித்தேன். மேரி, இவற்றையெல்லாம் முன்பே உன்னிடம் சொல்லியிருக்கிறேன். நீ குறும்புச் சிரிப்புடன், 'பாவம், செல்வன்!' என்று மட்டும் கூறுவாய். அவன் குணத்தை ஆதரிப்பது போல் எனக்குத் தோன்றும்.

மேரி தன் சொந்த விஷயத்தைத் தெரிவித்தாள். 'செல்வனைப் பற்றி நீ இப்படிக் குறை கூறுகிறாய். ஆனால், என் நிலை வேறு' என்று தன் அனுபவத்தை விவரித்தாள். 'என்னால் என் ஹனியை விட்டுப் பிரிந்திருக்கவே முடியாது. ஆனால் அவரோ வேலை வேலை என்று வீட்டிற்கு வந்தால்கூட அலுவலகப் பணியில் மூழ்கிவிடுவார். நாம் சற்று விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும். மிக எளிதாக செல்வனின் போக்கைச் சரி செய்து விடலாம். ஆண்கள் கோழைகள்' என்றாள்.

நடிகை ஜெனிலா டி சௌசா ஜிம்மிற்கு சென்று உடற்பயிற்சி செய்து வருகிறார். இதற்காக ஒரு உடற்பயிற்சியாளரை பிரத்யேகமாக நியமித்துள்ளார். தென்னிந்திய படங்களில் நடிப்பதைவிட்டு பாலிவுட் வாய்ப்பிற்காக சென்ற நடிகை எதிர்பார்த்த அளவிற்கு வாய்ப்பில்லாததால் மீண்டும் தென்னிந்திய படங்களில் நடிக்க முடிவு செய்துவிட்டாராம்.

– க.ரவீந்திரன்



"நான் எப்போதும் தோற்றுப் போக மாட்டேன். எனக்கு விமலா மட்டும் போதும். உன்னிடம் வெட்கம் விட்டுச் சொல்கிறேன். அவன் வந்து சென்ற தன் விளைவு... ஒரு மாதம் கழித்துக் கருவுற்றிருப்பதை

Compiled by lavan_joy

உறுதிப்படுத்திக் கொண்டு, மருத்துவரிடம் சென்று விமலாவிற்குத் தங்கை வருவதைத் தடுத்துவிட்டேன்.”

செய்தியறிந்து மேரி உரிமையுடன் என்னை ஏசினாள். என் செய்கையைக் கண்டித்தாள். கருவைக் கலைப்பது பாவம் மட்டுமன்று; உடல் ஆரோக்கியத்திற்கு எதிரானது என்றாள். அதைக் கேட்டு நான் அவளுடன் கடுமையாக விவாதித்தேன். பல நாள்கள் இருவரும் பேசவில்லை. ஆனால், நான் விமலாவை வளர்ப்பதிலும், கல்லூரிப்



பணிகளைச் செவ்வனே செய்வதிலும் மன நிறைவடைந்தேன். நாள்களைக் கழித்தேன்.

செல்வனிடமிருந்து கடிதங்கள் வாரம் இருமுறை வரும். மிக மிக அக்கறையுடன் என்னை விசாரிப்பான். மும்பை நகரத்தை வர்ணிப்பான். பேறு காலத்திற்கு முன்பாக ஒரு தடவை மும்பைக்கு நான் வர வேண்டும் என்று வற்புறுத்தினான். விமான டிக்கெட் வாங்கி அனுப்புவதாக எழுதியிருந்தான். “இங்கே பிரபலமான பெண்கள் மருத்துவமனை இருக்கிறது. ஒருமுறை உடலைச் சோதித்துக் கொள்ளலாம். ஆணா, பெண்ணா என்று ‘ஸ்கேன்’ எடுத்துப் பார்த்துக் கொள்ளலாம். கருவில் வளரும் குழந்தைக்கு மூன்று மாதங்கள் நிறையும் முன்பு மகாபலேஷ்வர், கோவா போன்ற இடங்களில் உல்லாசமாகப் பார்த்து ரசிக்க வேண்டும். அதன் பிறகு அலைச்சல் கூடாது. கருவில் வளரும் குழந்தைக்கு ஆபத்து என்று எழுதினேன். பிறப்பது குழந்தையாக இருக்க வேண்டும் என்று மும்பை மகாலட்சுமியை வேண்டிக் கொண்டிருப்பதாக அவன் எழுதினான். நான் மறுமொழிக் கடிதம் ஏதும் எழுதவில்லை.


Compiled by lavan_joy

ஒருநாள் காலையில் கதவு தட்டும் ஓசை கேட்டு வேலைக்காரி கதவைத் திறந்தாள். செல்வன் வந்து நிற்கிறான். குளியலயிறையிலிருந்த என்னிடம் 'ஐயா வந்திருக்கார்' என்று அவள் கிசுகிசுத்தாள்.

குளியலறைக்கே அவன் வந்து விட்டான். ஆண்களுக்கு மட்டும்தான் அதி தீவிர ஆசையா? என்னை ஆரத் தழுவினான். அதற்குப் பிறகு... உன்னிடம் சொல்லக் கூசுகிறது. சீச்சி... ஆண்களாம் ஆண்கள்! அவன் என் வயிற்றைத் தடவினான். முதுகைத் தடவியிருந்தால் அதில் காதல், காமம், வாஞ்சை என்று சொல்லலாம். நான் புரிந்து கொண்டேன். நான் சிரித்தேன்.

'செல்வி, மூன்று மாதம் நிறைந்து விட்டதல்லவா?' என்றான் அசட்டுச் சிரிப்புடன். நானும் சிரித்தேன், அவனுடைய உள் நோக்கம் புரிந்து

**எ**கிப்து அரசி ஹாட் ஷெப்காட் (கி.மு.1472–58) டாய்ர் அல் பஹ்ரி என்ற இடத்தில் பெரும் பொருட் செலவில் கட்டிய பெரிய கோயில் இது. எகிப்தின் மிகச் சிறந்த சுற்றுலாத் தலங்களில் இதுவும் ஒன்று.

**- க.ரவீந்திரன்**

கொண்டு. சிறிது நேரம் கழித்து அவனும் புரிந்து கொண்டான். உதட்டைப் பிதுக்கினான். 'வேலைக்காரி போகட்டும். விரிவாகப் பேசுவோம்' என்றேன்.

என் வயிற்றில் கரு வளர்ந்து மூன்று மாதங்களாகியிருக்கும் என்ற கற்பனையில் திளைத்திருக்கிறான். மூன்று மாதமென்றாலும் இன்னும் சில மாதங்களுக்கு உடலின்பத்திற்குத் தடையில்லை என்பதை அவன் எங்கோ படித்திருக்கிறான். இவ்வளவு ஆண்டுகள் தனிமை வாசத்தில் காமக் கலையை மிக ஆவலுடன் படித்திருக்கிறான். அனுபவத்திருக்கிறானோ தெரியாது. நான் சந்தேகப்படவில்லை.

மேரி! ஆருயிர்த் தோழியாக உன்னைக் கருதுகிறேன். உடல் உணர்ச்சியை – தாபத்தை அடக்கக் கூடியவள் பெண்கள்தாம். ஆனால், ஆண்கள் எளிதில் உணர்ச்சிவயப்படுவார்கள். சிந்திக்க மாட்டார்கள். வெறி வந்தால் அவர்களுக்கு அடைக்கலம் தரப் பல வழி வகைகள் உள்ளன. அதே நிலை பெண்களுக்கு ஏற்பட்டால், அவளுக்கு வேறு பெயரிடுகிறது சமூகம். 'ஒரு' மாதிரியாகப் பார்க்கிறது. கடவுள் படைப்புக் காலத்திலிருந்தே அப்படிதான். என் சிந்தனைகளை, மன உளச்சலை உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் பங்கிட்டுக் கொள்ளமுடியும்?

மேரி சிரித்தாள். "விமலாவிற்குப் பிறகு மற்றொரு குழந்தை வேண்டாம்


Compiled by lavan_joy

"என்பது உன் எண்ணமா?" என்று ஒளிவு மறைவின்றிக் கேட்டு விட்டாள். என் கருத்தை அவள் ஏற்கவில்லை என்று தோன்றியது.

"என்னை முதன் முதலில் செல்வன் சந்தித்தபோது என்னிடம் ஈர்ப்பு ஏற்பட்டது எதனால்? நான் நினைக்கிறேன்... அவன் என் அறிவை நேசித்தான். என் குணத்தை நேசித்தான். பிறகுதான் என் உடலை நேசித்தான். என்னைப் பிள்ளைப் பெறும் எந்திரமாக எப்போது கருதத் தொடங்கினான், நான் சிந்தித்துப் பார்க்கிறேன். இருவரும் ஒரே இலட்சியத்துடன் இருக்கிறோம் என்று நம்பியே நான் அவனிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்தேன். தொடக்கத்திலேயே என் உடலைத்தான் விரும்பினான் என்பதை உணர்ந்திருந்தால் நான் அவனை ஏற்றிருக்க மாட்டேன்.

கணவன்–மனைவி இணைந்து வாழ்வது குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மட்டுமன்று. உலகில் கணவனும் மனைவியும் ஆற்ற வேண்டிய பணிகள் பல உள்ளன. நீ என்ன கேட்கிறாய்? விவாகத்தின் போது சொல்லப்படும் மந்திரங்களில் 'நல்ல புத்திர– புத்திரிகளைப் பெற்று மக்கள் உற்பத்திக்காக இருவரும் ஒரு மனத்தோடு மணக்கிறோம்' என்று சொல்கிறதே... அதற்கு என்ன பதில் என்று கேட்கிறாயா? இதற்கு என்ன பதில் சொல்வது? பிரஜை உற்பத்தியை மட்டும் திருமணத்தின் பலன் என்பதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். மூத்தோர் சொற்களையெல்லாம் நாம் தவறாகப் புரிந்து கொள்கிறோம்.

உலகில் மக்கள் பெருக்கத்திற்கு ஆண் – பெண் சேர வேண்டாமே. அறிவியல் வளர்ச்சியில் அதற்கு வழிமுறைகள் வந்து விட்டன. நாமிருவரும் மிகவும் மனம் விட்டு பேசும்போது 'பச்சையாக' – நீல விஷயங்களை – மஞ்சள் பத்திரிகையில் வெளியிடுவது போல் பேசுகிறேனே என்று தவறாக எண்ணாதே.

நான் ஆராய்ச்சியின் உச்சித்திற்கே போய் விட்டேன். மனித நேயம் என்றால் என்ன... ஆண்– பெண் மனம்

**யோசனை**

**க**ண்ணைச் சுற்றி கருவளையம் தோன்றினால் அது நீங்குவதற்கு ஒரு யோசனை. புதினா இலை, வெந்தய இலை, துளசி இலை ஆகிய மூன்றையும் சமஅளவு எடுத்துக் கொண்டு அரைத்துப் பிழிந்தால் மூன்று இலைகளின் சாறும் வரும். இரவு படுப்பதற்குமுன் கண்ணைச் சுற்றி இந்த சாறை பூசிக் கொண்டு படுக்க வேண்டும். காலையில் எழுந்தால் கருவளையங்கள் நிறம் மாறிவிடும்.

- சி.ரகுபதி, போளூர்



Compiled by lavan_joy

ஒன்றுபட்டு சேருவது என்றால் என்ன... என்று தெளிவாகச் சொல்ல என்னால் முடியும். கணவன், மனைவியைக் குழந்தை பெறுவதற்காக அவள் சம்மதமின்றி வற்புறுத்துவதும் பலாத்கார வகையைச் சேர்ந்ததே, சட்டப்படி குற்றம் ஒருபுறம் இருக்கட்டும். அது மனம் என்னும் பஞ்சு மெத்தையில் விழும் சிறு துளி நெருப்பு என்பதை உணர வேண்டும். உம்... எங்கோ தொடங்கி எங்கோ செல்கிறேன். அன்று அவன் காம வெறியுடன் வந்திருப்பதை நொடியில் புரிந்து கொண்டேன் என்று நான் சொல்லி முடிக்கும் போது எனக்கே மூச்சுத் திணறியது.

“உனக்கு இது மூன்றாவது மாதம் என்ற எண்ணத்துடன் வந்தேன். மறுபடியும் ‘அபார்ஷன்’ செய்து கொண்டாயா?” என்று செல்வன் சீறினான்.

மனைவி என்பதால் எப்படி வேண்டுமானாலும் கேட்டு விடலாமா? அவன் முகத்தில் நெருப்புத் துண்டங்களைக் கண்டேன். “ஆமாம்.. எனக்கு விமலா ஒருத்தி போதும். வேறு சந்ததி வேண்டாம். நல்ல பெண்ணாக, நாட்டுக்கு எடுத்துக்காட்டாக அவள் ஒருத்தியை மட்டும் வளர்க்க விரும்புகிறேன்.”

அவன் முகத்தில் அப்போது ஏற்பட்ட விகாரமான தோற்றம் அவனுடைய குரூரமான எண்ணத்தின் பிரதிபலிப்பாக இருந்தது.

“என் ஆசை... கொள்கையே வேறு. நீ இப்போது நடந்து கொள்ளும் முறையே வேறு. உன்னை விட்டு நான் பிழைப்புக்காக வெளிநாடு செல்வதால், உனக்கு பிரிவாற்றாமை துன்பம் ஏற்படவில்லையா? எனக்கு மட்டும்தான் உடலின்ப வெறியா? உனக்குக் கணவனிடம் சேர்ந்து இன்பமாக இருக்கும் ஆசை தோன்றுவதில்லையா? ஒரு வேளை நான் பிரிந்திருப்பது உனக்குச் சௌகரியமான போக்கை ஏற்படுத்தியிருக்கலாம்” என்றான்.

நான் சீறினேன். “ என்ன செல்கிறாய் செல்வா? பேச்சிலும் வரம்பு மீறுகிறாய். உன்னைப் போல் காமப் பசி பிடித்தவளல்லள் நான். நீ என் அருகே இருக்க வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டேன். உன்னை அடைவதற்குப் பெரும் தியாகங்கள் செய்தேன் என்பதை மறக்காதே. என் சேமிப்பு முழுமையும் அளித்தேன். இருவர் மனமும் மிகவும் ஒரே போல் இருக்கிறது என்று மகிழ்ச்சியாக உன்னை ஏற்றேன். நம் சந்திப்பின்போது உன் சுண்டு விரல் கூட என் மீது ஒரு நாளும் படச்செய்ய மாட்டேன். திருமணம் உறுதியாகி விட்டது என்பதற்காக வரம்பு மீற நான் விரும்பவில்லை. தத்துவம், இலக்கியம், மனித நேயம்... இப்படியாகத்தான் நாம் பேசுவோம். இரண்டு ஆராய்ச்சி உள்ளங்கள் ஒன்று சேர்ந்தன என்று என் சிநேகிதிகள் பெருமைப் படுவார்கள். உன்


Compiled by lavan_joy

விகார எண்ணம் நம் பிணைப்புக்குப் பிறகுதான் ஏற்பட்டது. இந்த ஆறு வருடங்களில் மூன்று பிரஜைகள் உற்பத்தி செய்திருக்க வேண்டும் என்று நீ சொல்கிறாய். எனக்குக் குழந்தை ஆசையில்லை. விமலா ஒருத்தி போதும்" என்று வேகமாகப் பேசினேன்.

அதற்கு அவன் போட்டானே ஒரு குண்டு "குழந்தை ஆசை என்பது இரண்டாவது விளைவுதான். முதல் விளைவு நம் தாபம். அதைத் தீர்க்க உடல் சேர்க்கை. உனக்குத் தெரியாதா? உன் அறிவு, அழகு, வளப்பமான தோற்றத்திற்கு உன்னை நெருங்க இதுவரையில் யாரும் முயலவில்லையா? மிகவும் படித்ததால் எப்படி வேண்டுமானாலும் தந்திரமாகப் பேசி விட நினைக்காதே. நானும் உன் அளவுக்குப் படித்தவன். ஆராய்ச்சிப் பட்டம் பெற்றிருந்தால் உன்னை விட அதிகம் சம்பாதித்திருப்பேன். ஆனால், நீ பணத்தின் மீது ஆசைப் படாதவள். ஆனால் பட்டம், பதவி மீது பேராசை கொண்டவள். அதை அடைய நீ என்ன வேண்டுமானாலும் செய்யத் துணிவாய் என்பது தெரியும். நானில்லாமலே நீ கருவுற்றிருக்கலாம். அதை மறைக்க விரும்புக்கிறாய். நான் அறியக் கூடாதென்பதற்காக கருவைக் கலைத்திருக்கலாம். அது சட்டப்படி பெரும் குற்றம் என்று உனக்குத் தெரியும். நான் அதைச் சொல்லி உன்னிடமிருந்து பிரிந்து விட விரும்பவில்லை. குழந்தை பெறாமல் இன்பம் நுகரும் முறையில் எனக்கு உடன்பாடில்லை. கல்யாணமான புதிதில் நான் அந்த எண்ணம் கொண்டிருந்தேன். ஆனால் இப்போது கொள்கையை மாற்றிக் கொண்டேன்.

போனது போகட்டும். கருவில் குழந்தையைச் சுமந்துள்ள நிலையில் நீ என்னுடன் சேரத் தடை சொல்வாய் என்று எண்ணினேன். இப்போது சுலபமாகி விட்டது. ஒரே கணம்–சில நோடிகள். வா– இன்று எவ்வளவு தடவை முடியுமோ அவ்வளவு தடவை உன்னிடம் இன்பம் காணும் துடிப்புடன் நான் வந்திருக்கிறேன். அதற்காகவே விமானத்தில் பறந்து வந்திருக்கிறேன்" என்று அவன் உரிமைக் குரலில் தன் மிருக உணர்வைச் சிந்தினான்.

"மேரி! நான் கேட்கிறேன். கணவன் என்ற உரிமைச் சீட்டு வைத்திருப்பதால் அவனுக்கு எல்லா நியாய தர்மங்களும் ஏற்பட்டு விடுமா? மனைவியை அவன் என்னவென்று நினைத்து விட்டான்? துஷ்யந்தனை சகுந்தலை ஒருமுறை ஏசியதாகப் படித்திருக்கிறேன். அந்தச் சொல்லை விட மிக அதிகமாகப் பேசினேன். என் உள்ளத்தில் எழுந்த ஆவேசத்தை இப்பொது விவரிக்க முடியாது. பெரியவர்கள் பெண்களைச் சக்தி வடிவமாகக் கருதும் போது சாந்த லட்சுமி, சந்தான லட்சுமி, சௌபாக்கிய லட்சுமி, தனலட்சுமி என்று அமைதியான தோற்றமளித்து உருவகப்படுத்தியதால் பெண்கள் சாத்வீக மானவர்கள் என்று நினைத்துவிடுகிறார்கள்.


Compiled by lavan_joy

அதே பெரியவர்கள் வீறு கொண்டெழும் காளியாகவும், வீர லட்சுமியாகவும் மாறக் கூடியவளாகவும் பெண் சக்தியைப் படைத்திருக்கிறார்கள் என்பதை மறந்தார்கள்.

அன்புள்ள மேரி! என்ன செய்தேன் தெரியுமா? ஒரு கரத்தால் அவன் அணிந்திருந்த ஷர்ட்டையும் மற்றொரு கரத்தால் அவன் தலைமுடியையும் பிடித்து, கதவுக்கு வெளியே கொண்டு தள்ளினேன். எங்கிருந்து பலம் வந்தது! அவன் கொண்டு வந்திருந்த பெட்டியையும், மற்ற பொருள்களையும் எடுத்து வெளியே வீசினேன்.

நல்ல வேளையாக என் மகள் கல்லூரிக்குச் சென்று விட்டாள். அவள் இருந்திருந்தால், என் மான மரியாதையே போயிருக்கும். ‘அப்பா வெளிநாட்டிலிருக்கிறார்’ என்று இதுவரையில் பொய் சொல்லி வந்தேன். ‘இன்றைக்கு அப்பாவிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது’ என்று கூறி அவளை நம்பவைத்து நாடகமாடியிருக்கிறேன். அவள் அப்பாவைப் பற்றி உயர்வான குணச்சித்திரத்தை அவள் முன் வரைந்திருக்கிறேன். அவை அத்தனையும் பொய்யாகி விடும். முழுச் சம்பவங்களையும் உணரும் பக்குவம் அவளுக்கு வரவில்லை. நல்லவேளை, அவள் அப்போது அங்கில்லை. காலை நேரமாதலால் மற்ற குடித்தனக்காரர்கள் வீட்டுக் கதவு திறக்கப்படவில்லை.

“உடனே போய் விடு. இல்லாவிடில், வாட்ச்மேனைக் கூப்பிடுவேன்’’

**அ**ண்மையில் டெல்லியில் நடந்த கலை விழாவில் வேத் குப்தா பிரகாஷ் என்பவர் பாலிமரில் உருவாக்கி, காட்சிக்கு வைத்திருந்த 117X133X84 அங்குல அளவிலான இந்த நாய் சிலை பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது.

- க.ரவீந்திரன்




Compiled by lavan_joy

என்று ஆவேசத்துடன் கூவினேன், யாரோ திருடன் வந்து விட்டதுபோல். இப்போது அந்தக் காட்சியை நினைத்தாலும் என் மெய்சிலிர்க்கிறது. நான் அப்போது நடந்து கொண்ட முறையை எண்ணி வருத்தப்படுவதா?

**ம**ணிரத்னத்தின் ராவண், அசோகவனம் படங்களுக்காக நடிகை ஐஸ்வர்யா ராய் சமீபத்தில் ஆபத்தான சண்டைக் காட்சிகளில் தைரியமாக நடித்துள்ளாராம்.

**- க.ரவீந்திரன்**



வெட்கப்படுவதா? அந்தப்போதில் எனக்கு ஒன்றும் புரியவில்லை. ‘பாதகம் செய்பவரைக் கண்டால் மோதி மிதித்துவிடு’ என்று மகாகவி சொல்ல வில்லையா?

என் படபடப்பு அடங்க அதிக நேரமாயிற்று. அவன் பெட்டியையும் பண்டங்களையும் எடுத்துக் கொண்டு ‘லிப்டில்’ ஏறி வாசல் செல்லும் வரையில் பார்த்துக் கொண்டிருந்தேன். அனுமதியின்றி என் வீட்டுக்கு அனுப்பக்கூடாது என்று அடுக்குமாடிக் குடியிருப்புக் காவலரிடம் அன்று இட்ட உத்தரவுதான். யார் வருகிறார்கள்? சிலபொழுது என் மகளின் தோழியர்கள் வர விரும்புவார்கள். ‘நெருங்கிய சிநேகிதியை நம் வீட்டிற்கு அழைக்கட்டுமா? என் பிறந்த நாளுக்கு அவளுக்கு விருந்து வைப்போமா?’ என்று ஆசையாய் விமலா கேட்பாள்.

“விருந்துதானே! உயர்தர உணவு விடுதிக்கு அவளையும் இன்னும் ஓரிரண்டு உன்

Compiled by lavan_joy

நெருங்கிய சிநேகிதிகளையும் அழைத்துப் பகல் விருந்து கொடுப்போம். ஒவ்வொருவருக்கும் நல்ல பரிசுப் பொருள்கள் தருவோம்” என்று அவளை உற்சாகப்படுத்தி விடுவேன். நோக்கத்தை மாற்றி விடுவேன்.

என் கண்ணெதிரே விமலா மளமளவென வளர்ந்து விட்டாள். பெண்கள் வளர்ச்சிக்குக் கேட்க வேண்டுமா? அவளை உயர்தரப் படிப்பு படிக்க வைக்கத் திட்டமிட்டேன். அவள் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிப்பேன். நெருங்கிய சிநேகிதி போல் தோள் மேல் கை போட்டுப் பழகுவேன். நல்ல தாய் போல் அணைத்துக் கொள்வேன். அவளைப் பயமுறுத்தாமல் அறிவுரை கூறுவேன். அவள் விரும்புவதை வாங்கித் தருவேன். ஒவ்வொரு நொடியும் அவள் போக்கை, பழக்கத்தைக் கண்காணிப்பேன். எனக்கேற்பட்ட பிரச்சனை அவளுக்கும் ஏற்பட்டு விடக் கூடாதன்றோ.

செல்வனுடன் எனக்கேற்பட்ட பிணக்கைத் தவிர வேறு எனக்குச் சங்கடங்களில்லை. நான் பணியாற்றும் கல்லூரியிலும் சரி, என்னுடன் பழகும் சிநேகிதிகளும் சரி... என்னைப் பற்றித் தவறாகப் பேசுவதில்லை. என் கணவர் சந்தேகப்பட்டது போல், எந்த ஆணும் என்னைத் தவறாக நோக்குவதில்லை. நான் நெருப்பு என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். வீட்டில் ஆண் துணையில்லாமல் கணவனை விட்டுப் பிரிந்திருக்கிறாளே என்று கிசுகிசு பேசுவது–அவதூறு பரப்புவது இல்லை.

விமலாவுக்குப் பிறகு, தம்பியோ தங்கையோ பெற்றுக் கொள்ளும் எண்ணம் எனக்கு ஏற்படாததற்கு, எனக்கு நானே நன்றி சொல்லிக் கொண்டேன். ஆனால், என் மற்றொரு நெருங்கிய தோழி சுந்தரவல்லி குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டதால் இரண்டு குழந்தைகள் மட்டும் பெற்றுக் கொண்டாள்.

‘என்னைப் போல் நீ கருத்தடை செய்து கொண்டிருக்கலாம்’ என்று அவள் யோசனை சொன்னாள்.

‘கருத்தடை பெண் ஒழுக்கத்திற்கு சமூகம் தரும் சான்றிதழா? அதற்குப் பிறகு ஒரு பெண் துணிவுடன் வேறு ஆடவருடன் விருப்பத்தைத் தீர்த்துக் கொள்ள முடியாதா? செல்வன் சொல்லியிருகிறான். அவன் புத்திதானே பேச்சில் வெளிவரும்.

“என் உடலில் எந்தவிதச் செயற்கை மாற்றத்தையும் நான் விரும்பவில்லை வல்லி. உடலில் கட்டுப்பாடு ஆயுதம் மூலம் ஏற்பட வேண்டாம். நம்மிடமிருக்கிறது. புலனடக்கத்தைக் கடைப்பிடிக்க முடியாதா? மகாத்மா காந்தி நூல்களை நான் படித்திருக்கிறேன். என் ஆராய்ச்சி, என் படிப்பு,


Compiled by lavan_joy

எனக்குள்ள இயற்கையான குணம் என்னை எந்தக் குறுக்கு வழியிலும் செல்ல அனுமதிக்கவில்லை. திருமணமாகி பதினேழு ஆண்டுகளை மிகக் கட்டுப்பாட்டுடன் கழித்து விட்டேன். சோதனை செல்வன் வழிவந்தால் என்னால் எதிர்த்து நிற்க முடியாதா'' என்று சுந்தரவல்லிக்கு பதில் சொல்வது போல் என் உறுதியான முடிவைச் சொன்னேன்.

வல்லி சிரித்தாள். "செல்வி! வாதத் திறமை உன்னிடம் அதிகம் இருக்கிறது. புலனடக்கம் அவ்வளவு எளிதன்று. ஆண்கள் நடவடிக்கை வெளியே தெரியுமாறு இருக்கிறது. பெண்களாகிய நமக்கு உணர்ச்சியை அடக்கி வைத்துக் கொள்வது ஒரு கலை. தவிர, கணவரின் ஆசையை நிறைவேற்றுவது பெண்கள் கடமை, தர்மமில்லையா?'' என்று விவாதத்தைத் தொடங்கினாள். தொடர்ந்து, "உடனே மேல் நாட்டு அறிஞர்கள் எழுதியவற்றை உதாரணமாகக் கூறுவாய். நடைமுறையில் அது சாத்தியமில்லை என்பது என் உறுதியான முடிவு. ஒன்று, உன் கணவனை உனக்குப் பிடிக்காமல் இருக்க வேண்டும் அல்லது அவன் உன்னைத் திருப்திப்படுத்த முடியாதவனாக இருக்க வேண்டும். அதனால்தான் நீ ஒரே குழந்தையுடன் நின்று விட்டாய். நான் மனதில் நினைத்ததைச் சொல்கிறேன், இவ்வளவு நாள்கள் இதைப் பற்றிக் கடுமையாக உன்னுடன் விவாதிக்க விரும்பினேன்" என்றாள் வல்லி.

மேரியும் உடனிருந்தாள். அவள் மதக் கட்டுப்பாட்டைக் கடுமையாகக் கடைப்பிடிப்பவள். அன்று வழக்கத்திற்கு விரோதமாக அவள் பேச்சு இருந்தது. "இன்னும் ஒளிவு மறைவின்றிச் சொல்கிறேன்... உன்னிடம் ஏதொ குறைபாடு. அதை மறைக்கவே மகப்பேற்றைத் தவிர்க்கிறாய். அதனால் கணவனை நெருங்க விடவில்லை" என்று தைரியமாகக் குற்றம் சாட்டினாள்.

சுந்தரவல்லிக்குப் பதில் சொல்ல நான் விரும்பவில்லை. பெண்களை ஆண்கள் குழந்தை பெறும் யந்திரமாகக் கொள்ளக்கூடாது என்பதே என் உறுதியான முடிவு.

விவாதத்தைக் கடுமையாக்கி அதன் மூலம் சுந்தரவல்லியின் நட்பை நான் முறித்துக் கொள்ள விரும்பவில்லை. மேரியிடம் பழகுவது போல் பழக விரும்பினேன். பேச்சின் போக்கை மாற்ற விரும்பினேன்.

"வல்லி! உனக்குச் சமாதானமாகக் கூற வார்த்தைகள் இல்லை. செல்வனைக் காதலித்து, குணம் அறிந்தே கல்யாணம் செய்து கொண்டேன். முதலில் பணப் பேயாக இருந்தவன், பிறகு காமப் பேயாக மாறி விட்டான். என்னிடம் குறைபாடிருந்தால் அவன் விவாகரத்து மூலம் வேறு பெண்ணை மணந்திருப்பான். அவனுக்கு நான் வேண்டும். என்னிடம் எப்போதும் 'அது' வேண்டும். படித்தவனா அவன்? விடு. வேறு


Compiled by lavan_joy

பேச்சு பேசுவோம். சென்ற முறை அவன் வந்து நான் விரட்டியடித்த போது விட்டுச் சென்ற பையில், ஆண்கள் பயன்படுத்தும் கருத்தடைச் சாதனங்கள் இருந்தன. என்னிடம் அதைப் பயன்படுத்த விரும்பியிருக்கலாம் அல்லது வசதிப்படும் போது வேறு எங்காவது பயன்படுத்திருக்கலாம். அவன் மாறிவிட்டான்'' என்று பேச்சை முடித்தேன்.

செல்வனை நான் விரட்டியடித்த பிறகு தோழியருடன் இவ்வளவு பெரிய விவாதம் நடந்துச் சில நாள்களுக்குப் பிறகு, தளத்தின் காவல்காரர் என்னைப் பார்க்க யாரோ வந்திருப்பதாக வந்து கூறினார். பால்கனி வழியாகப் பார்த்தேன். செல்வன் நின்று கொண்டிருந்தான். நான் வெளியே போய்விட்டதாகச் சொல்லித் தவிர்க்க விரும்பவில்லை.

பிள்ளையார் கோவிலுக்குப் போவது போல், அவனை வெளிவாசல் அருகேயே சந்தித்து, அப்படியே திருப்பி அனுப்பி விட விரும்பினேன்.

செல்வனும் நானும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டோம்.

“எப்போது வந்தாய் செல்வா?” என்று காவல்காரருக்குச் சந்தேகம் ஏற்படாதிருக்க இயற்கைத் தன்மை மாறாமல் கேட்டேன்.

அவன் விழிகளாலேயே பேச விரும்பினான். அவன் அருகே பெட்டிகள், சிறு கூடை மற்றும் பெரிய காகிதப் பார்சல் அவ்வளவும் இருந்தன.

அன்று காலையிலிருந்து என் மனமே சரியில்லை. என் நடவடிக்கை தவறோ என்ற எண்ணம் என்னை உறுத்தியது. அவனையும் அழைத்துக் கொண்டு பிள்ளையார் கோயிலுக்குச் சென்றேன். என் உடலில் ஒருவித நடுக்கம். இவனிடமிருந்து தப்புவது எப்படி என்று யோசித்தவாறே கோயிலுக்குள் நுழைந்தேன்.

“நான் இன்னும் பல் கூட தேய்க்கவில்லை. கோயிலுக்குள் எப்படி வருவது? நீ போய் சாமி கும்பிட்டு விட்டு வா. பிறகு இருவரும் வீட்டிற்குச் செல்வோம்” என்றான் செல்வன்.

தொடர்ச்சி 34-ம் பக்கம்

## மூலம்

உனக்கு
மூல நட்சத்திரமென்று
யார் சொன்னது
உன் மூலம் தானே
எனக்கு
நட்சத்திர அந்தஸ்தே
வந்தது.

## ஹைக்கூ

கடலின் முகத்தில்
இத்தனை சுருக்கங்களா?
அலைகளாய்.

- செல்வராஜா, சேலம்.


Compiled by lavan_joy

'அகராதி' – திகில் கதை மன்னன் ராஜேஷ்குமார் எழுதிய 'இரவில்ஒருவானவில்' நாவலைத் தழுவி எடுக்கப்படும் படமாம். 'பழனியப்பா கல்லூரி' படத்தில் நடித்த பிரதீப்தான் ஹீரோ. மோனிகா, கீர்த்தி சாவ்லா, அர்ச்சனா, சௌந்தர்யா ஆகிய நான்கு பேருமே 'அகராதி'யின் கதாநாயகிகளாம். சத்யன், வையாபுரி, வாசு விக்ரம், புவனேஸ்வரி, அலெக்ஸ், ஹெலன், வெண்ணிற ஆடை மூர்த்தி ஆகியோரும் நடிக்கின்றனர். பணத்துக்காக யாருமே செய்யத் துணியாத ஒரு தவறான செயலை ஒருவன் செய்கிறான். அதன் விளைவுகள் என்ன என்பதை விவரிப்பதுதான் படத்தின் கதையாம்.



விவேகா

'மதன்' – ஜெய் ஆகாஷ் கதாநாயகனாக நடிப்பதுடன், கதை, வசனம் எழுதி, இயக்கும் படம். சுனேனாவும், ரேணுகா மேனனும் கதாநாயகிகளாக நடிக்கின்றனர். அநாதை இளைஞன் மதன், தன் மணவாழ்வாவது ஒரு பெரிய குடும்பத்தினருடன் அமைய வேண்டும் என எண்ணுகிறான். அவன் வாழ்வில் இரு பெண்கள் குறுக்கிடுகின்றனர். ஒரு பெண் மதனுக்காகத் தன் குடும்பத்தை உதறத் தயாராக இருக்க, இன்னொருத்தி, சொந்த பந்தங்களை விட்டு வர என்னால் முடியாது என்கிறாள். மதன் யாருடைய காதலை ஏற்கிறான் என்பதுதான் கதையின் அடித்தளமாம். கிளைமாக்ஸ் யாரும் எதிர்பாராத வகையில் இருக்கும் என்கிறார்கள்.



'பழசி ராஜா' – மம்முட்டி, சரத்குமார் இணைந்து நடித்துள்ள பிரம்மாண்டமான மலையாள சரித்திரப் படம். இந்திய விடுதலைப் போர் 1857–ல் முதலில் வடநாட்டில்தான் துவங்கியது என்று தவறான கருத்தே நமக்கு போதிக்கப்பட்டு வருகிறது. ஆனால், அதற்கு அரை நூற்றாண்டு காலத்திற்கு முன்பே, வடகேரளத்தில் வாழ்ந்த மலபார் மாவீரன் பழசிராஜா, வெள்ளையரை எதிர்த்துப் போர்கள் பல புரிந்திருக்கிறான் என்னும் உண்மை வரலாற்றை உலகறியச் செய்ய வரும் படம் இது. வெள்ளையரும் இவன் வீரத்தைப் புகழ்ந்திருக்கின்றனராம்.

(பழசிராஜாவின் யுத்தகாலம் 1795 முதல் 1805 வரை. ஆனால் இவனுக்கு கால் நூற்றாண்டுக் காலத்திற்கு முன்பே வெள்ளையரை எதிர்த்துப் போரிட்ட தமிழ் மன்னன் பூலித்தேவன் வரலாற்றைத் தமிழ்த் திரையுலகம் கவனம் கொள்ளுமா என்பது தெரியவில்லை.)

Compiled by lavan_joy




ஆகா வேட்டை படத்தில்...

'**ஆறுமுகம்**' – பரத், ப்ரியாமணி ஜோடி சேர்ந்து நடிக்கும் படம். சரண்யா மோகன் பரத்தின் சகோதரியாக நடிக்கிறார். கருணாஸ், இளவரசு, மகாதேவன், சீதா ஆகியோர் நடிக்கின்றனர். கூல் புரொடக்ஷன்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தை இயக்குபவர் சுரேஷ் கிருஷ்ணா. ஆறுமுகத்தின் ஐந்து பாடல்களில் ஒன்று சஹாரா பாலைவனத்தில் படமாக்கப்பட்டுள்ளதாம். ரம்யா கிருஷ்ணன் ரோல் படையப்பா நீலாம்பரிக்கு இணையான கனமுடையது என்கிறார்கள்.

'**ஆட்ட நாயகன்**' – ஷக்தி நாயகனாக நடிக்கும் படம். அவருக்கு ஜோடியாக ரம்யா நம்பீசன். அப்பாவாக நாசர். கதையை நம்பி வரும் படம் என்கிறார்கள். 'நீ எனக்குப் பிள்ளையே இல்லை' என சதா எரிந்து விழும் அப்பா நாசரை 'அடுத்த ஜென்மம் என்று ஒன்று இருந்தால், அதில் நான் உனக்கு மகனாகப் பிறக்கணும்டா' என்று பாசத்துடன் நெஞ்சுருக வைக்கிறார் மகன் ஷக்தி. இதிலிருந்தே தந்தை – மகன் மோதல் பற்றிய கதை என்பது புரிகிறது. கிராமம் சார்ந்த குடும்பக் கதையாம். விக்ரமனின் உதவியாளர் கிருஷ்ணராம் இயக்குகிறார். நிச்சயம் வெற்றிப்படமாக உருவாக்குவார் என நம்பலாம்.

**விவேகா** – இளம் பாடலாசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர். அண்மையில், 'கந்தசாமி' படத்தின் வெற்றி இவரை மிகுந்த மகிழ்ச்சியடைய வைத்துள்ளது. காரணம், இந்தப் படத்தின் பாடல்கள் அனைத்தும் விவேகா எழுதியவை என்பதே. 75 படங்களுக்கு மேல் பாடல்கள் எழுதி, அவற்றில் 'கோழி வெடக்கோழி...', 'விழிகளில் விழுந்துவிட்டாய்...' போன்று பல பாடல்கள் பட்டிதொட்டியெங்கும் பாப்புலராகியிருப்பினும், 'ஒரு படத்தில் அனைத்துப் பாடல்களையும் எழுதும் போது கிடைக்கிற மகிழ்ச்சியே தனி' என்கிறார் விவேகா. நடிக்கிற வாய்ப்பு வந்தாலும் அதை இன்முகத்துடன் மறுத்துவிடும் விவேகாவின் இலட்சியம் வெற்றிகரமான திரைப்படப் பாடலாசிரியராகவே திகழ்வது மட்டும்தானாம்.

**- பவானி மைந்தன்**



Compiled by lavan_joy

31-ம் பக்கத் தொடர்ச்சி

அவனுக்குப் புது நம்பிக்கை ஏற்பட்டிருக்க வேண்டும்.

நாள்தோறும் ஒன்பது முறை வலம் வருவேன். அன்று சுற்றிக் கொண்டே இருக்கிறேன். இவனிடமிருந்து எவ்வாறு தப்புவது என்பதையே ஆலோசித்துக் கொண்டு நான் சுற்றியதால், எண்ணிக் கையை மறந்தேன். கால் வலித்தது. இலேசான கிறுகிறுப்பு ஏற்பட்டது.

வெளியே வந்தேன். அவன் கையில் மல்லிகை மலருடன் நின்றிருந்தான். செல்வனின் தோற்றமே மாறியிருந்தது. முகத்தில் முன்பிருந்த பொலிவு இல்லை. இளமை குறைந்து முதுமை ஆக்ரமித்திருந்தது. முகம் வழித்து சில நாள்கள் ஆனதால் கறுப்பும் வெளுப்புமாகக் கலந்து முடி காட்சியளித்தது. முகத்தில் சுருக்கங்கள். பற்கள் சில விழுந்து விட்டதால் வலக் கன்னத்தில் குழி விழுந்திருந்தது. அப்போதுதான் தொலைவிலிருந்து வந்ததால் தலைமயிர் கலைந்திருந்தது. கண்களில் சோர்விருந்தது. விலையுயர்ந்த உடை அணிந்தாலும் பல நாள்கள் பயணத்தால் அழுக்குப் படிந்திருந்தது.

''வா, போகலாம்'' என்றழைத்தேன். அவன் திகைத்து நின்றான்.

"நிஜமாகவா செல்வி? பழைய காவல்காரன் போலிருக்கிறது. என்னைப் பார்த்தவுடனேயே அவன் புரிந்து கொண்டான். ஆனால், உன் கணவன் என்பதை அவன் அறிய மாட்டான். அன்று கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக விரட்டப்பட்டவன் என்பதைத் தெரிந்து கொண்டான். அவனிடம் மரியாதைக் குறைவைக் கண்டேன். திரும்பிப் போய்



**கோ**ஸ்டா ரீகா ஒரு மத்திய அமெரிக்க நாடு. இங்கு காணப்படும் கோன் பறவைகள் கருத்த உடலும், மார்பில் பளிச்சென்ற வண்ணமும் கொண்டவை. இவற்றின் பெரிய ரம்ப முனை அலகுகள் வேறுபட்ட பிரகாசமான வண்ணத்துடன் காணப்படுகின்றன.

- க.ரவீந்திரன்



Compiled by lavan_joy

விடலாமா என்று ஒரு கணம் எண்ணினேன். அதிகத் தொலைவிலிருந்து உன்னைப் பார்க்க ஓடோடி வந்த நான், காவலாளியின் அவமரியாதைக்கு அஞ்சலாமா? செல்வி! நிஜமாக என்னை வீட்டிற்கு அழைக்கிறாயா?" –செல்வன் துக்கம் தொண்டையை அடைக்க அதே சமயம், தன் ஆசை நிறைவேறப் போகிறது என்ற களிப்பு விழிகளில் ஒளி வீச என்னைத் தொடர்ந்தான். சற்றுத் தள்ளியே நடந்து வந்தான்.

"அதே தளம் தான். எவ்வளவு வருஷங்கள் ஆனாலும் வீட்டின் புதுமை மாறவில்லை. எவ்வளவு நாட்களானாலும் உன் மேனியழகு குறையவில்லை. செழிப்பும் வடிவழகும் குறையவில்லை" என்று கூறி அருகே இருந்த சோபாவில், "உட்காரலாமா?" என்று கேட்டு விட்டு உட்கார்ந்தான். அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. என்மனம் மாறுகிறதோ? புரியவில்லை.

"குளித்து விட்டு வாருங்கள். பசியாறிய பிறகு பேசலாம்" என்றேன்.

"கல்லூரிக்கு?" என்று அவன் என் முகத்தில் எதையோ எதிர்பார்த்துப் பேசினான்.

"இன்று விடுப்புக்காகக் கல்லூரிக்கும் போன் செய்து விடுகிறேன்" என்றேன்.

மெல்லத் தள்ளாடி நடந்து குளியலறை சென்றான். நிம்மதியாகக் குளித்தான். பெட்டியைத் திறந்து புதிய உடையை அணிந்து கொண்டான். நல்ல புடைவை ஒன்றை வாங்கி வந்திருந்தான். அதை என்னிடம் கொடுத்தான். கொடுக்கும்போது என் கரங்களை அழுத்தமாகப் பற்றினான். என் பார்வையைத் தாங்காமல் தலை குனிந்து கொண்டான். சம்பந்தம் சம்பந்தமில்லாமல் ஏதேதோ பேசிக் கொண்டே, சிற்றுண்டியைச் சுவைத்துச் சாப்பிட்டான்.

"நீயும் என் எதிரே உட்கார்ந்து கொள். இருவருமாகச் சேர்ந்து சாப்பிடுவோம்" என்று அசட்டுச் சிரிப்புடன் சொன்னான்.

"நீ சாப்பிடு! வேலைக்காரி வரும் நேரம். நாமிருவரும் சேர்ந்து சாப்பிடுவதைப் பார்த்தால் தவறாக நினைப்பாள். புதிய கதைகள் புகையும். தீ இந்த அடுக்ககத்தில் மளமளவென்ற பரவும்."

"என்னை வேலைக்காரிக்குத் தெரியாதா? நாம் சேர்ந்து எடுத்துக் கொண்ட போட்டோ ஒன்றைக் கூட இந்த வீட்டில் மாட்டவில்லையா?"

"என் மகளுக்குக் கூட உன்னைத் தெரியாது" என்றேன்.


Compiled by lavan_joy

## பூ

என்னவளே!
ஒரு
பூ
ஒருமுறைதான்
மலரும்
நீ
சிரிக்கும் போதெல்லாம்
மலர்கின்றாயே!

- சி.ரகுபதி, போளூர்

## ஹைக்கூ

காஞ்சிப் பட்டை வாங்கக் கேட்டு,
கந்தலாகிப் போனது
வாழ்க்கை!

- பொதக்குடி 'வெற்றிமுரசு'

## தூறல்

மிட்டாய் கிடைத்த
மகிழ்ச்சியில்
குதூகலமாய் விளையாடும்...
பெற்றோர் தினத்தன்று
அனாதைக் குழந்தைகள்!

- பொதக்குடி 'வெற்றிமுரசு'

"நம் மகளுக்கு என்று சொல்லக் கூடாதா? மிகவும் ஆசையுடன் நாம் இணைந்து அனுபவித்துப் பழகிப் பிறந்தவள். நீ மறந்திருக்க மாட்டாய். பிரசவ ஆஸ்பத்திரிக்குப் போவதற்கு முதல் நாள் வரை நான் உன்னை விடவில்லை. தொந்தரவு செய்து கொண்டிருந்தேன்."

"உச்... மெதுவாகப் பேசு 'அது' ஒன்றுதான் உன் இலட்சியம், அதே எண்ணம், பெரும் விருப்பம் என்பதை அந்த நிலையிலேயே புரிந்து கொண்டேன். ஆசைக் கணவனாக இல்லாமல் மிருகக் கணவனாக நீ இருக்கப் போகிறாய் என்பதை அறிந்தேன். என்னைச் சந்தித்த போதும், பழகிய போதும். காதலை வளர்த்த போதும்... நீ என் உடலழகை மட்டும் விரும்புவன் என்பதை நான் உணரவில்லை. அது மட்டுமே உன்னுடைய பசி என்றறிந்த பிறகுதான் நான் மெல்ல மெல்ல விலகத் தொடங்கினேன். அதனால் உன்னை விலக்கி விடவில்லை."

அவன் சிரித்தான். கள்ளச் சிரிப்பு, காமம் நிறைந்த அந்தச் சிரிப்பு இன்றும் குறையவில்லை.

"அதனாலென்ன? முறைதவறி நான் ஏதும் நடக்கவில்லையே... நான் கைப் பிடித்தவளுடன் தானே சுகமாயிருக்க விரும்பினேன். எனக்குத் தாகம் ஏற்படும் போது தணிக்காத தண்ணீர்க் குடம் இருந்து என்ன பயன்? என்னை நீ ஒதுக்கினாய். எனக்கு மட்டும் தான் இச்சை; உனக்கில்லாதது போல் நடித்தாய். என்னை ஏனோ நெருங்கவிடவில்லை. இன்னும் எனக்குச் சந்தேகம்தான்"

"செல்வா! இதோ பார். இந்தப் பேச்செல்லாம் இப்போது வேண்டாம். நல்ல


Compiled by lavan_joy

வேளையாக என் மகள் கல்லூரிக்குப் போயிருக்கிறாள். அவளிருக்கும் போது நீ வரவில்லை. நானும் உன்னை வீட்டிற்கு அழைப்பதற்கு முன்பு பிள்ளையாரிடம் எவ்வளவோ வேண்டிக் கொண்டேன்."

கை கழுவி விட்டு அவன் என் அருகே வந்தமர்வான் என்று நான் எதிர்ப்பார்க்கவில்லை. அதில் உரிமை புலப்பட்டது. என் உடல் சிலிர்த்தது. நாம் செய்தது மகத்தான தவறோ என்று எண்ணினேன். எழுந்திருக்க விரும்பினேன்.

"சரி... சரி... ஓய்வெடுங்கள். இங்கே இப்படியே சோபாவில் படுத்துக் கொள்ளுங்கள். பிறகு பேசிக் கொள்ளலாம். எனக்கும் கல்லூரிக்கான அவசர வேலை இருக்கிறது" என்றேன்.

"உள்ளே கட்டிலில் படுக்கும் அளவுக்கு என்னை அனுமதிக்க உனக்கு மனம் வரவில்லையா?" –பச்சையாகக் கேட்டான்.

'என்ன செய்வது? இந்த நிலையில் அவனை எப்படி வெளியேற்றுவது?' என்று கவலை கொண்டேன்.

"வேலைக்காரி வருவாள். மற்றும் அடுத்த வீட்டுக்காரியும் வரலாம். புதிய மனிதரைப் படுக்கை அறையில் பார்ப்பதை விட வெளியே தங்க வைத்திருப்பதைத் தவறாக நினைக்க மாட்டார்கள். யாருமே வீட்டிற்கு வரும் புதிய விருந்தினரை உடனே படுக்கை அறையிலா தங்க வைப்பார்கள்?" என்றேன்.

"நான் புதிய விருந்தினரா?"

"ஆமாம்... என் மகளுக்கு நீ புதியவன்தான். அவள் வந்த பிறகு அவள் உன்னைப் பார்க்கும் பார்வையிலும் ஏற்றுக் கொள்ளும் விதத்திலும் நான் முடிவு செய்கிறேன். நீ இங்கேயே படுத்துக் கொள். இவ்வளவு ஆண்டுகள் உன்னை வைத்திருந்த நிலையிலேயே நான் இப்போதும் நடத்த விரும்புகிறேன்" –மிகவும் மெல்லிய குரலில், அழுத்தமாகப் பேசினேன்.

அவன் என்னைப் பார்த்த பார்வையில், அவன் நினைப்பதை என்னால் உணர முடிந்தது.

என் பிளாட் கதவை மூடவில்லை. நல்ல வேளையாகக் கல்லூரியிலிருந்து மாணவியரின் நோட்டுப் புத்தகங்களைக் கல்லூரிப் பணியாளர் கொண்டு வந்தார். "நேற்று இவற்றை நீங்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்லவில்லை. முதல்வர் உங்களிடம் கொண்டு தரச் சொன்னார்கள். இன்று எதிர்பாராமல் நீங்கள் விடுப்பு எடுத்துக் கொண்டீர்கள். ஓய்வு இருந்தால் மதிப்பெண் இடுவதற்காகக் கொடுக்கச் சொன்னார். நாளைக்குப் பட்டியல் தயாரிக்க வேண்டுமாம்" என்றார் மிகவும் மரியாதையாக.


Compiled by lavan_joy

ஓரக் கண்ணால் சோபாவில் அமர்ந்திருக்கும் செல்வனைப் புது மனிதரைப் பார்ப்பது போல் அவர் பார்த்ததை நான் கவனிக்கத் தவறவில்லை.

அவர் உடனே போய் விட்டார்.

"பார்த்தீர்களா... சொல்லி முடிக்குமுன் கல்லூரி ஆள் வந்து விட்டான். படுக்கை அறையில் நீங்கள் இருந்திருந்தால் என்ன நினைத்திருப்பான்? சரி, நான் மாணவியர்களின் விடைகளைத் திருத்த வேண்டும். நீங்கள் அமைதியாக ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்"என்றேன்.

"செல்வி! இப்படி அருகே வந்தமர்ந்தபடியே விடைகளைத் திருத்தேன்" என்றான். அந்தச் சிரிப்பில் தெரிந்த விஷமம் எனக்குப் புரிந்தது.

தூவென்று துப்பியிருப்பேன். ஆனால், ஏனோ அவனை மரியாதைக் குறைவாக நடத்த மனம் வரவில்லை.

என் பார்வையின் கடுமை தாங்காமல் சோபாவிலேயே சாய்ந்தான்.

களைப்பு. ஓய்வு தேவைப்பட்டதால் உடனே தூங்கத் தொடங்கினான். நான் எழுப்பவில்லை. மதிய உணவுக்கும் கூட எழுப்பவில்லை.

"அம்மா! யாரம்மா?" என்று கல்லூரியிலிருந்து வந்த விமலா கேட்டாள்.

என்னைப் பார்ப்பது, உறங்கும் செல்வனைப் பார்ப்பதுமாக இருந்தாள்.

செல்வனை யார் என்று சொல்வேன்?

அறை ஓரமாக இருந்த பெட்டி மற்றும் பைகளைப் பார்த்தாள். மறுபடியும் வினாவுக்கு விடை தெரிய என்னை நோக்கினாள்.

என்னவென்று சொல்வேன்? யார் என்று சொல்வேன்? விமலா சிற்றுண்டி அருந்தி விட்டு செல்வன் அருகே வந்தாள்.

"இவரை எங்கோ பார்த்தாற் போலிருக்கிறதே?" என்று புருவத்தை உயர்த்தினாள். நான் நெஞ்சைத் திடப்படுத்திக் கொண்டேன். இனியும் மறைக்கக் கூடாது. தாமதிக்கக் கூடாது. வேறு உறவு கூறித் தப்பிக்கக் கூடாது.

"உன் அப்பா... மிஸ்டர் செல்வன்!" என்று ஒவ்வொரு வார்த்தையாகச் சொன்னேன்.

மகளிடமிருந்து எதிர்பார்ப்பு எப்படி இருக்குமோ என்று அதிர்ச்சியுடன்


Compiled by lavan_joy

**ப**ந்தேல் கண்டை ஆண்ட பிரதிஹார அரசர்களின் பிரதிநிதிகளான சந்தாலர்களால் கி.பி.1030–இல் கஜுராஹோவில் (மத்தியப் பிரதேசம்) கண்டரீய மகாதேவர் கோயில் கட்டப்பட்டது. அருகில் உள்ளது ஜகதாம்பிகை ஆலயம்.

– க.ரவீந்திரன்

அவளை நோக்கினேன்.

''அப்பாவா, அம்மா? ஆஸ்திரேலியாவிலிருந்து உன்னைப் பார்க்க வருவதற்கு இவ்வளவு வருஷங்களா? அவருக்கு என்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை கூட இல்லையா?'' –செல்வன் அருகே நின்று வியப்பு, வேதனை, பரிசுப் பொருள் கிட்டிய மகிழ்ச்சி எல்லாம் சேரக் கேட்டாள்.


செல்வன் விழித்தெழுந்த போது மாலை மங்கி இருள் சேர்ந்து விட்டது. அவன் எழுந்தவுடன் நான் அருகில் இல்லை. ஹால் விளக்கை ஏற்றவில்லை.

விமலா, கையில் காபி கோப்பையுடன் செல்வன் அருகே நெருங்கி, "காபி சாப்பிடுங்கள். ரொம்ப நேரம் தூங்கி விட்டீர்கள். எப்போது வந்தீர்கள்? ஆஸ்திரேலியா நேரத்திற்கும் சென்னை நேரத்திற்கும் அதிக வித்தியாசமிருக்கும். அதனால் சென்னை நேரம் பிடிபட நாள்களாகும்"என்றாள் விமலா.

பல ஆண்டுகளாக அப்பாவைப் பற்றி நான் சொல்லி வந்தது,



Compiled by lavan_joy



**அ**லுமினியத்தால் உருவாக்கப்பட்ட இந்த இயந்திர மனிதனின் உயரம் 7.2 மீட்டர்கள், (23,76 அடி) மேற்கு ஜப்பானில் உள்ள ஒசாகா நகரத்தில் அண்மையில் இந்த பிரம்மாண்ட இயந்திர மனிதனை காட்சிக்கு வைத்திருந்தார்கள்.

**- க.ரவீந்திரன்**

ஒரு நாள் திடீரென்று வருவார் என்று பொய் சொல்லியிருந்தது. இன்று நடந்து விட்டது. மெய்யாகி விட்டது அப்பா வந்துவிட்டார். தந்தையும் மகளும் என்ன பேசிக் கொண்டார்களோ...தெரியாது.

நான் சுந்தரவல்லியின் வீட்டிற்கு விரைந்துச் சென்றேன். நடந்தவற்றைக் கூறி, அடுத்து என்ன செய்யலாம் என்று முடிவெடுக்க, ஆலோசனை கேட்கும் பரபரப்பில் இருந்தேன்.

சுந்தரவல்லி வருவதற்கு நேரமாகும் போல் தோன்றியதால் நான் வீட்டிற்குத் திரும்பி விட்டேன். நான் வீட்டிற்கு வந்த சிறிது நேரத்தில், சுந்தரவல்லி விரைந்து என் வீடடைந்தாள். சோபாவில் அமர்ந்து விமலாவும் செல்வனும் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தாள்.

என்னை வெளியில் அழைத்தாள். என் கன்னத்தை இலேசாகத் தட்டினாள். இடுப்பைக் கிள்ளினாள். மெல்லச் சிரித்தாள். ''ஓகே'' என்றாள் சங்கேதப் பாஷையில்.

''செல்வி! உனக்கு நல்ல காலம்தான். நாற்பதாவது வயதில் உன் கணவன் உன்னைத் தேடி வந்து விட்டார். நீ கிழவியாகவில்லை. ஆனால், செல்வன் முதுமையை மெல்ல மெல்ல அடைந்து வருகிறான். மீண்டும் அவனை வெறுத்து விரட்டி விடாதே. அவன் 'அது'க்காக வந்திருக்கிறான் என்று எண்ணித் தள்ளி விடாதே. அப்படி இருந்தாலும் என்ன? மற்றொரு குழந்தை பிறக்கும் வயது தள்ளிப் போய் விட்டது இல்லையா?'' கண்களைச் சிமிட்டியவாறு சொன்னாள், "வாய்ப்பை நழுவ விடாதே. ஊர், உலகத்தினர் சந்தோஷப்படுவர். உன் மகளுக்குத் தந்தை வந்து



Compiled by lavan_joy

விட்ட செய்தி எவ்வளவு மகிழ்ச்சியைத் தரும். உனக்குத் தெரியாதா? உளநூல், மனித நேயம், பெண்ணின் நல வாழ்வு என்று ஆராய்ச்சி செய்து பட்டம் பெற்ற நீ, உன் வாழ்க்கையில் அவற்றுக்கு இலக்கியமாக நடந்து கொள். 'இவளுடைய கணவன் எங்கே? கணவன் இருந்தால் இதுவரை வராமல் இருப்பாரா?' என்று மறைமுகமாக மற்றவர்கள் பேசிவந்தது மாறி விடுமன்றோ. உன் மகள் விமலாவுக்குத் திருமணம் செய்ய முயலும் போது நீ எப்படிச் சமாளிப்பாய்? செல்விக்குச் செல்வன் வந்ததை விட விமலாவுக்கு அப்பா வந்து விட்டார். விமலாவுக்கு அப்பா இருக்கிறார். தந்தையற்ற பெண் அல்ல அவள் என்று உலகம் வம்பு பேசாது இல்லையா?" –சுந்தரவல்லியின் பேச்சில் நியாயம் இருப்பதை அறிந்தேன்.

'அது'க்காக செல்வன் வந்திருக்கிறான் என்று தவறாக ஏன் எண்ண வேண்டும்? விமலாவுக்கு அப்பா வந்து விட்டார். இனி எதைப் பற்றியும் கவலையில்லை. அதைப் பற்றியும் பயமில்லை.

அப்பா வந்து விட்டார்; குணம் திருந்திய கணவன் வந்து விட்டான் என்ற மகிழ்ச்சி செல்விக்கு மறுநாள் இல்லை.

விமலா தூங்கிய பிறகு, செல்வன் தன்னை நெருங்கியதும் செல்வி கடுமையாக அவனை நோக்கினாள்.

"செல்வன்! விமலாவுக்கு அப்பாவாக மட்டும் இருங்கள். அதற்கு மேல் எதுவும் வேண்டாம்"என்றேன்.

செல்வன் சிரித்தான்.

"செல்வி! உன்னை நெருங்கிப் பேச வந்தது 'அது'க்காக இல்லை. இந்தா, இந்தக் கடிதத்தைப்படி" என்று ஓர் உறையிலிருந்த கடிதத்தை நீட்டினான்.

விருப்பமில்லாவிட்டாலும் நான் படித்தேன். மற்றொரு முறை படித்தேன். என் கரங்கள் நடுங்கின. செல்வனைத் திரும்பிப் பார்த்தேன்.

அந்த மருத்துவ அறிக்கையில் எழுதப்பட்டிருந்தது: செல்வனுக்குக் கிட்னியில் புற்றுநோய். முற்றும் நிலைக்கு வந்துவிட்டது. உடனே கவனிக்க வேண்டும். இரண்டொரு நாள்களில் மருத்துவமனையில் சேர்க்காவிடில் செல்விக்குச் செல்வனில்லை. விமலாவுக்கு அப்பா இல்லை. நான் அதிர்ச்சியடைந்தேன்.

"செல்வா!" என்று கூவினேன். அவன் மடியின் மீது என் முகத்தைப் புதைத்துக் கொண்டேன். என் உடல் நடுங்கிக் கொண்டேயிருந்தது.

**முற்றும்**



Compiled by lavan_joy